

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து நான்காவது அறிக்கை

பொதுப்பணித் துறை, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும்
செய்தித் துறை, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, மக்கள் நல்வாழ்வு
மற்றும் குடும்ப நலத்துறை

(பொதுப் பட்டியல்)

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 7 MAY 2008

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(2007 – 2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து நான்காவது அறிக்கை

பொதுப்பணித் துறை, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும்
செய்தித் துறை, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, மக்கள் நல்வாழ்வு
மற்றும் குடும்ப நலத்துறை

(பொதுப் பட்டியல்)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.

பொருளடக்கம்

பக்கங்கள்

குழுவின் அமைப்பு .. iii

அறிக்கை

1. முகவுரை .. v

2. குழுவின் கூட்டங்கள் .. v

3. பொதுக் குறிப்புரைகள் .. vi

இணைப்பு–1

1. 2007–2008–ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பெற்றனவாகவும் / படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாகவும் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரம்:–

1. பொதுப்பணித் துறை .. 1–10

2. தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை .. 13–40

3. சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை .. 43–44

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை .. 47–123

இணைப்பு–2

2. குழுவின் பரிந்துரை .. 124–125

இணைப்பு–3

3. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் .. 126–127

2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு

(15.5.2007 அன்று அமைக்கப் பெற்றது)

தலைவர் :

1. திரு. தி. வேல்முருகன்

உறுப்பினர்கள்:

2. திரு. அன்பில் பெரியசாமி
3. திரு. கே.எல். இளவழகன்
4. திரு. சு. குணசேகரன்
5. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
6. திரு. அ. சௌந்திரபாண்டியன் (லால்குடி)
7. திரு. பி. பலராமன்
8. திரு. கு. பாண்டுரங்கன்
9. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
10. திரு. எச். வசந்தகுமார்
11. திருமதி ராணி வெங்கடேசன்
12. திருமதி ஜி. லதா

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திரு. வெ.சி. சுப்ரமணியன்	:	கூடுதல் செயலாளர்
திரு. தி. கோவிந்தராசு	:	துணைச் செயலாளர்
திரு. க. பாலசுப்ரமணியன்	:	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

பெறுநர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை–600 009.

முகவுரை

1. 2007–2008 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) இருபத்து நான்காவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்

2. குழு 2007–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் சென்னை–2 ஓமந்தூரார் அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகத்திலுள்ள குழுக்கூட்ட அறையில் கூடியது.

3. மேற்படி குழுக் கூட்டத்தில் பொதுப்பணித் துறை, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைகளின் அரசுச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் குழு கலந்துரையாடி பேரவையில் மாண்புமிகு அமைச்சர்களால் அளிக்கப்பெற்ற பொதுப்பணித் துறை, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைகள், தொடர்பான 301 உறுதிமொழிகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய பதிலறிக்கைகளை ஆராய்ந்து அவற்றில் 83 உறுதிமொழிகள் நிறைவேற்றப் பெற்றதாகவும், 12 உறுதி மொழிகள் படித்து பதிவு செய்யப்பட்டனவாகவும், 1 உறுதிமொழி பரிந்துரை செய்யப்பட்டனவாகவும், எஞ்சியுள்ள 205 உறுதிமொழிகளை நிலுவையில் வைத்து பிரிதொரு நாளில் ஆய்வு செய்யலாம் எனவும் குழு முடிவு செய்துள்ளது.

4. மேற்சொன்ன கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை எனக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் விவரங்கள் இணைப்பு–1இல் உள்ளன. குழுவின் பரிந்துரை இணைப்பு–2 இல் உள்ளது. குழு சென்னை மற்றும் இதர மாவட்டங்களில்கூடிய நாட்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு–3–இல் உள்ளன.

பொதுக் குறிப்புரை

5. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சில நேர்வுகளில் வருடக்கணக்கில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய காலதாமதங்கள் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய மக்களுக்கு சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் கொடுத்த உறுதிமொழிகள் மீது அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் குழு வலியுறுத்துகிறது.

6. குழுவின் இவ்வறிக்கைக்கு 2008–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை–600 009.
29, ஏப்ரல் 2008,
சித்திரை, 17,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

தி. வேல்முருகன்,
தலைவர்
அரசு உறுதிமொழிக் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொதுப்பணித் துறை

இணைப்பு-I

உலக வங்கி திட்டத்தின் கீழ் பாசன விவசாய சங்கத்தை முறைப்படுத்திப் புதியதாக ஏரி பாசன சங்கம் அமைத்து செயல்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	691 / 2003
4.	பொருள்	:	உலக வங்கி திட்டத்தின் கீழ் பாசன விவசாய சங்கத்தை முறைப்படுத்தி புதியதாக ஏரி பாசன சங்கம் அமைத்து செயல்படுத்துதல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	24409
	நாள்	:	10.05.2003
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.கே.ஜி.பி. ஞானமூர்த்தி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்று ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ...ஆம்
8.	துறையின் பதில்	:	தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம், 2000-ன்படி, முதற்கட்டமாக நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்ட 20 மாவட்டகளின் பாசன பகுதிகளில் 1586 நீரினை பயன்படுத்துவோர் சங்கங்கள் வரையறுக்கப்பட்டு, 1552 நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களின் மேலாண்மை குழுக்கள் 2004 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் வேட்பு மனு தாக்கல் செய்யப்படாத அல்லது வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட அல்லது நீதிமன்ற தடைஉத்தரவு பெறப்பட்ட 14 தலைவர்கள் மற்றும் 170 ஆட்சி மண்டல தொகுதி உறுப்பினர் பதவியிடங்களுக்கும் இச்சங்கங்கள் அமைக்கப்பட்ட பிறகு இறப்பு, பதவி விலகல், தகுதி நீக்கம் மற்றும் திரும்ப அழைத்தல் ஆகியவற்றால் காலியிடங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும், அவற்றில் தேர்தல் நடத்திட மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நீர்வள ஆதார தொகுப்பு திட்ட பாசன பகுதிகளில்

விவசாயிகள் அமைப்பின் பகிர்மான மற்றும் திட்ட நிலை அமைப்புகளான பகிர்மான குழுக்கள் மற்றும் திட்டக் குழுக்களின் மேலாண்மை குழுக்களை அமைப்பதற்கு பெரிய பாசன அமைப்புகளின் பாசன பகுதிகள், திட்டக்குழு பகுதிகளாகவும் மற்றும் பெரிய & நடுத்தர பாசன அமைப்புகளின் பாசன பகுதிகள் பகிர்மான குழு பகுதிகளாகவும் அரசினால், அரசு ஆணை (நிலை) எண்கள்.107 மற்றும், பொதுப்பணி (டபிள்யூ-2)த்துறை, நாள்: 23.04.2007-ல் வரையறுத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காலியிடங்களை நிரப்பவும் 161 பகிர்மானக் குழுக்கள் மற்றும் 9 திட்டக்குழுக்களின் மேலாண்மைக் குழுக்களுக்கு தேர்தல் நடத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள 8 மாவட்டங்களில் உள்ள அனைத்து பாசன பகுதிகளிலும் இச்சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 20 மாவட்டங்களில் உள்ள நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படாத பிற பாசன பகுதிகளில் இச்சட்டத்தை செயல்படுத்தவும் ஏற்கனவே அரசு ஆணை (நிலை) எண்.114, பொதுப்பணி (டபிள்யூ-2)த்துறை, நாள்: 30.04.2007-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது கூடுதலாக நீர்வள, நிலவள திட்டம் செயல்படுத்தப்படும் 63 உப வடிநில பாசன பகுதிகளில் இச்சட்டத்தின்படி நீரினை பயன்படுத்துவோர் சங்கங்களை அமைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

சென்னை மாவட்டம் திருவொற்றியூர் தொகுதி, எண்ணூர், கத்திவாக்கம் பகுதியிலுள்ள பக்கிங்காம் கால்வாயைத் தூர்வாரி ஆழப்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	2
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	26 / 2004
4.	பொருள்	:	சென்னை மாவட்டம் திருவொற்றியூர் தொகுதி எண்ணூர், கத்திவாக்கம் பகுதியிலுள்ள பக்கிங்காம் கால்வாயைத் தூர்வாரி ஆழப்படுத்துதல் குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	31698
	நாள்	:	06.02.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.த. ஆறுமுகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், பொதுப்பணி, மதுவிலக்கு மற்று ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் ...மேற்படி திட்டத்திற்கு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் ஆகியவைகள் பரிசீலனையில் உள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்த பின்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	எண்ணூர் அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சாம்பல் கலந்த நீர் பக்கிங்காம் கால்வாயில் கலக்கா வண்ணம் குழாய் மூலம் சாம்பல் குளத்தில் (Ash Pond) நிரப்பப்படுகிறது. மணல் மேடுகள் தற்பொழுது முழுவதுமாக அகற்றப்பட்டு மணலி முதல் எண்ணூர் வரை தூர்வாரும் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பக்கிங்காம் கால்வாய் எளிதாக வழிந்தோடி எண்ணூர் கடற்கழியில் கலக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சென்னை, ஈரோடு ஆகிய இடங்களில் அரசு அலுவலர்களுக்கான குடியிருப்பு வசதிகள் செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	3
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	1217 / 2006
4.	பொருள்	:	சென்னை, ஈரோடு ஆகிய இடங்களில் அரசு அலுவலர்களுக்கான குடியிருப்பு வசதிகள் செய்து தருவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	31.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் ... ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் அரசு அலுவலர்களுக்கான குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படும்.
8.	துறையின் பதில்	:	பகுதி-2 திட்டம் 2006-2007 இன் கீழ் ஈரோடு, திருச்சி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. சென்னை தாடண்டர் நகரில் 24 எண்கள் 'சி'வகை அரசு குடியிருப்புகள் கட்டும் பணி முன்னேற்றத்தில் நடைபெற்று வருகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

24 கட்டிட கோட்டங்களுக்கு புதிய ஈப்புகள் வாங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	4
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	1220 / 2006
4.	பொருள்	:	24 கட்டிட கோட்டங்களுக்கு புதிய ஈப்புகள் வாங்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	31.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்
			... ரூ.96.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	பொதுப்பணித் துறை கட்டட அமைப்பின் கீழுள்ள 24 கட்டட கோட்டங்களுக்கு 24 எண்ணிக்கை புதிய ஈப்புகள் வாங்குவதற்காக 2006–2007 பகுதி 2 திட்டத்தின் (Part II Scheme) கீழ் ரூ.96 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்று ஆறு இலட்சம் மட்டும்) அரசாணை எண்.137, பொதுப்பணி(ஜி1)த்துறை, நாள்: 13.09.2006–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி கட்ட அமைப்பிலுள்ள கழிவு செய்யப்பட்ட 24 ஈப்புகளுக்கு பதிலாக புதிய ஈப்புகள் வாங்கப்பட்டு, ஈப்பு ஒதுக்கீடு செய்யப்பட்ட 24 கோட்டங்களுக்கு ஈப்புகள் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் 04.01.2007 அன்று வழங்கப்பட்டுவிட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

காவிரி தீரத்து மாவட்டங்களில் உள்ள சிற்றாறுகளையும், வாய்க்கால்களையும் தூர்வாரி கட்டமைப்புகளைப் புதுப்பித்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	5
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	278 / 2007
4.	பொருள்	:	காவிரி தீரத்து மாவட்டங்களில் உள்ள சிற்றாறுகளையும், வாய்க்கால்களையும் தூர்வாரி கட்டமைப்புகளைப் புதுப்பித்தல் குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீதான மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் ... மொத்தம் ரூ.40 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	இதற்கான விரிவான மதிப்பீடுகள் 2007–2008 ஆம் ஆண்டு விலை மதிப்பீட்டில் மாற்றி அமைக்கப்பட்டு நிதித்துறையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் காவிரியில் பாசனம் காலம் முடிவுற்றதும் துவக்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழக ஆறுகளில் வெள்ளக் காலங்களில் வீணாக கடலுக்குச் செல்லும் நீரை பயன்படுத்துவதற்கு திட்டங்கள் வடிவமைக்க ஓர் உயர்மட்டக் குழுவினை அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	6
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	309 / 2007
4.	பொருள்	:	தமிழக ஆறுகளில் வெள்ளக் காலங்களில் வீணாக கடலுக்குச் செல்லும் நீரை பயன்படுத்துவதற்கு திட்டங்கள் வடிவமைக்க ஓர் உயர்மட்டக் குழுவினை அமைப்பது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீதான மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் ... உயர்மட்டக் குழுவினை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.
8.	துறையின் பதில்	:	வெள்ளக் காலங்களில் வீணாக கடலுக்குச் செல்லும் ஆற்று நீரை பயன்படுத்துவதற்கு திட்டங்கள் வடிவமைக்க கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஓர் உயர்மட்டக் குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பேராசிரியர் ஏ.மோகனகிருஷ்ணன், அரசு ஆலோசகர் (நீர் தலைவர் ஆதாரம்) மற்றும் தலைவர், காவிரி தொழில்நுட்பக் குழுமம். அரசுச் செயலாளர், பொதுப்பணித் துறை (ஒய்வு) துணைத் தலைவர் திரு.ஆர். சுப்பிரமணியன், – உறுப்பினர்,

காவிரி தொழில் உறுப்பினர் நுட்பக் குழுமம் மற்றும் தலைமைப் பொறியாளர் பொதுப்பணித் துறை (ஓய்வு)

திரு.எம்.தீனதயாளன்,
அரசு ஆலோசகர் (திட்டங்கள்) } – உறுப்பினர்

தலைமைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை
திட்ட உருவாக்கம் } – உறுப்பினர்

திரு. பசுமலைத்தேவன்,
கண்காணிப்புப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை (ஓய்வு) } – உறுப்பினர்

கண்காணிப்புப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை, நீரியல் } – உறுப்பினர்

தலைமைப் பொறியாளர் அலுவலகம்,
மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு
நீர் ஆதார விவரக் குறிப்பு மையம்,
தரமணி தலைமைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை (ஓய்வு) } – உறுப்பினர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார உறுப்பினர் அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TRUTH ALONE TRIUMPHS

பொதுப்பணித் துறையில் பொறியாளர்கள் சுழற்சி முறையில் பணிமாறுதல் வழங்கும் திட்டத்தினை அமல்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	7
2.	துறையின் பெயர்	:	பொதுப்பணித்துறை
3.	உறுதிமொழி எண்.	:	317 / 2007
4.	பொருள்	:	பொதுப்பணித் துறையில் பொறியாளர்கள் சுழற்சி முறையில் பணிமாறுதல் வழங்கும் திட்டத்தினை அமல்படுத்துவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீதான மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் ... பொறியாளர்கள் அனைவரும் திட்டக் கட்டுமானம், திட்ட பராமரிப்பு, திட்ட உருவாக்கம் அலுவலகங்களிலுள்ள தொழில் நுட்பப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு, நிலத்தடி நீர்பிரிவு ஆகிய அனைத்து பிரிவுகளிலும் பணியாற்றி அனுபவம் பெறும் வகையில் வரும் காலத்தில் சுழற்சி முறையில் பணி மாறுதல் வழங்கும் திட்டத்தினை அமுல்படுத்த அரசு எண்ணியுள்ளது.
8.	செயலாளர் மற்றும் இதர அதிகாரிகளுடன் குழு நேரிடையாக கலந்துரையாடிய விவரம்	:	*அரசுச் செயலாளர்:–* பொதுப்பணித் துறையில் 2 டிவிஷன்கள் இருக்கின்றன. கட்டிடங்கள் மற்றும் நீர்வள ஆதார அமைப்பு என்று இருக்கிறது. இந்தப் பிரிவுகளில் உள்ளவர்களை சுழற்சி முறையில் பணியிட மாறுதல் வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்தால் நீர்வள ஆதார அமைப்பில் உள்ள பொறியாளர் அந்தப் பிரிவில் நிபுணராக இருப்பார். அவரைக் கொண்டு வந்து கட்டிடப் பிரிவில் போட்டால் அது குறித்து அவருக்கு எதுவும் தெரியாது. அதேபோல் கட்டிடங்கள் பிரிவில் உள்ளவரை நீர்வள ஆதார அமைப்பில் போட்டால், நீர்வளம் குறித்த அடிப்படையே அவருக்கு தெரியாது. எனவே சுழற்சி முறையில் நியமிப்பது சரியாக வராது.

தலைவர்:– நீர்வளப் பிரிவில் நிபுணராக இருப்பவர்களை கட்டிடங்கள் பிரிவில் போட்டால் பணியாற்ற சரியாக வராது. எனவே, பொதுப் பணித்துறை பொறியாளர்கள் சுழற்சி முறையில் பணி மாறுதல் செய்கின்றபோது பணிகள் சரியாக நடக்காது என்று துறைச் செயலாளர் அவர்களும், முதன்மைப் பொறியாளர் அவர்களும் தெரிவித்தார்கள். எந்தப் பிரிவில் யார் நிபுணர்களாக இருக்கிறார்களோ அவர்களை அந்தப் பிரிவில் போடுவதுதான் நல்லது என்றும் மற்ற துறைக்கு மாற்றினால் அவர்களால் மற்றப் பிரிவுப் பணிகளை சிறப்பாக செய்யமுடியாது. என்வே, இந்த உறுதிமொழியை அரசு கைவிடலாம் என்ற துறைச் செயலாளரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : படித்துப் பதிவு செய்யப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை

அறநிலையப் பணியாளர்களின் குறைகளைக் களைய நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	8
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	412 / 1997
4.	பொருள்	:	அறநிலையப் பணியாளர்களின் குறைகளைக் களைய நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	அறநிலையத்துறை, மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	03.04.1997
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு புலவர் பு.ம. செங்குட்டுவன், அறநிலையத்துறை அமைச்சர்
			...பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	மாநில அரசு ஊழியர்களுக்கு மைய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம் வழங்கப்பட்டது போல, இந்து சமய அறநிலையத்துறையின்கீழ் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியார்களின் ஊதிய விகிதங்களை திருத்தி அமைப்பது குறித்து பரிந்துரை அளிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில், முதுநிலை மற்றும் முதுநிலையல்லாத திருக்கோயில் பணியார்களின் ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டு 01.07.1997 முதல் வழங்க அரசாணை (நிலை) எண்.257, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள்:10.06.1998–ல் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரசாணையில் விடுபட்ட சில பணியிடங்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் மற்றும் சில பணி இடங்களில் ஊதிய விகிதங்கள் சில மாற்றம் செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண்.141, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள்:21.05.2004–ல் ஆணையிடப்பட்டு 01.07.1997 முதல் வழங்கப்பட்டு

வருகிறது. ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள 80 திருக்கோயில் பணியார்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள் அரசு கடிதம் (நிலை) எண்.401, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்: 04.09.1998-ன் வாயிலாக 01.07.1997 முதல் வழங்க ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. முதுநிலைத் திருக்கோயில்களில் பணிபுரியும் தொழிலுநுட்பப் பணியார்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்க அரசாணை (நிலை) எண்.409, நாள்: 28.11.2000-ல் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு ஊழியர்களுக்கு 01.01.2006-ல் அவர்கள் பெற்று வந்துள்ள அகவிலைப்படியில் 50 சதவிகித அகவிலைப்படியை அடிப்படை சம்பளத்துடன் சேர்த்து அகவிலை ஊதியம் (Dearmess Pay) வழங்கப்பட்டது போல, திருக்கோயில் பணியார்களுக்கும் 01.01.2006 முதல் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை சம்பளத்துடன் சேர்த்து அகவிலை ஊதியம் (Dearness Pay) வழங்க அரசாணை (நிலை) எண்.10, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை நாள்: 11.01.2007-ல் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்தமான் தீவில் வாழும் 2 இலட்சம் தமிழர்களின் குழந்தைகளுக்கு நல்ல தமிழ் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	9
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	329 / 1999
4.	பொருள்	:	தமிழ்நாடு அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்தமான் தீவில் வாழும் 2 இலட்சம் தமிழர்களின் குழந்தைகளுக்கு நல்ல தமிழ் பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் ஏற்படுத்துவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	15640
	துணை வினா		
	நாள்	:	30.04.1999
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.சோ. பாலகிருஷ்ணன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆவன செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	தற்போது அந்தமான் தீவில் 26 தொடக்க நிலை தமிழ்ப்பள்ளிகளும், 14 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளும், பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்து 2 கல்லூரிகளும், தமிழ்வழிக் கல்வியை மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதால் அந்தமான் தீவில் உள்ள தமிழர்களின் குழந்தைகள் தமிழ்வழிக் கல்வி பயில்வதில் எந்தவித இடர்பாடும் இல்லை. மேலும் அந்தமான தீவில் வாழும் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் பட்டப்படிப்பில் சேர்ந்து பயில விரும்பினால் ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழ்வழிக் கல்வி பயிலும் வகையில் இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான பதில் அரசு அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.17859/தவ1–1/2002, நாள்: 22.02.2002 இல் சட்டமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்து பதிவு செய்யப்பட்டது

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் படைப்புகளை நாட்டுடமையாக்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	10
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	141 / 2001
4.	பொருள்	:	டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் படைப்புகளை நாட்டுடமையாக்குவது குறித்து.
5.	2001–2002–ம் ஆண்டிற்கான கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	27.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர் ...டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் ஆற்றியுள்ள தொண்டை கருத்தில் கொண்டு, அவருடைய தமிழ்ப் படைப்புகளை நாட்டுடமையாக்குவது குறித்தும் அறிவிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு பரிவு தொகையாக ரூ.5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.300, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1–1) துறை, நாள்: 20.12.2001–இல் ஆணையிடப்பட்டது. டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் உரிமை கொண்டுள்ள டாக்டர் உ.வே.சா–நூல் நிலையம் நாட்டுடைமையை ஏற்காததால், நாட்டுடையாக்கப்பட்டு வெளியிடப்பட்ட அரசாணை நீக்கம் செய்யப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்து பதிவு செய்யப்பட்டது

தமிழகத்தில் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	11
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	154 / 2001
4.	பொருள்	:	தமிழகத்தில் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பது குறித்து.
5.	2001–2002–ம் ஆண்டிற்கான இந்து சமய அறக்கட்டளைகள் மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	28.08.2001
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
			...இவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட உள்ள வீடுகளை ஒதுக்கீடு செய்யவும் மற்றும் ஊரகவளர்ச்சி திட்டங்கள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கவும் முதலமைச்சரின் ஆணையின்படி படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நிதிவசதி மற்றும் இடவசதியுள்ள 52 திருக்கோயில்களின் மூலம் 85 அர்ச்சகர் குடியிருப்புகள் கட்டவும், நிதிவசதி இருந்து இடவசதியில்லாத 18 திருக்கோயில்கள் மூலம் 35 அர்ச்சகர் குடியிருப்புகள் திருக்கோயில்களுக்கு அருகாமையிலுள்ள இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களில் இடவசதியிருப்பின் அதனை குத்தகை அடிப்படையில் பெற்று குடியிருப்பு கட்டவும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டது. இடவசதியிருந்து நிதிவசதியில்லாத திருக்கோயில்களுக்கு 880 குடியிருப்புகள் மற்றும் நிதிவசதி மற்றும் இடவசதி ஆகிய இரண்டும் இல்லாத திருக்கோயில்களுக்கு 6,079 குடிருப்புகள்

கட்டவேண்டிய நிலையில் 2002 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டப்பட்டு தயாராக இருந்த 661 வீடுகளை பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பினை பரிசீலனை செய்ததில், 660 வீடுகள் திருக்கோயில்களில் இருந்து நீண்டதூர இடைவெளியில் இருந்த காரணத்தால் அவற்றினை அர்ச்சகர் குடியிருப்பாக பயன்படுத்த இயலாத நிலை எழுந்தது. இதனடிப்படையில் வீட்டுவசதி வாரியம் மூலம் உடுமலைப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள 1 குடிருப்பினை மட்டும் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டும், நீண்ட தொலைவில் இருந்ததால் இக்குடியிருப்பும் அர்ச்சகருக்கு வழங்கப்படவில்லை.

இந்நிலையில் ஊரக வளர்ச்சித்துறையின் இந்திரா நினைவுத்திட்டம் மற்றும் கடன் மற்றும் மானியத்துடன் கூடிய குடியிருப்பு திட்டம் ஆகியவற்றின் மூலம் குடியிருப்புகள் கட்டிக்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையருக்கு அனுமதி வழங்கப்பட்டது. தனது பெயரில் வீட்டுமனைப்பட்டா உள்ள அர்ச்சகர்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் மூலம் குடிருப்புகள் கட்டிகொள்ள முடியும் என்பதால் ஊரக பகுதிகளில் முதற்கட்டமாக அர்ச்சகர் குடியிருப்பு கட்டித்தர நடவடிக்கை ஏடுக்கப்பட்டது.

அர்ச்சகர்களுக்கு குடியிருப்பு கட்டி வழங்கும் திட்டத்தின்படி ஊரக வளர்ச்சித்துறையின் மூலம், இதுவரை 137 அர்ச்சகர்களுக்கு குடியிருப்புகள் பின்வருமாறு கட்டித்தரப்பட்டுள்ளன.

வ. எண்.	மாவட்டம்	குடியிருப்புகள் எண்ணிக்கை
1.	திருநெல்வேலி	24
2.	திண்டுக்கல்	2
3.	ஈரோடு	26
4.	கரூர்	2
5.	கடலூர்	26
6.	திருவாரூர்	5
7.	திருவண்ணாமலை	52
	மொத்தம்	137

தனது பெயரில் வீட்டுமனைப்பட்டா உள்ள அர்ச்சகர்கள் பெருமளவில் இத்திட்டத்தின் மூலம் வீடு கட்டிக்கொள்ள முன்வராததால் இத்திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த இயலாத நிலை உள்ளது.

இதுதவிர திருகோயில் நிதியினைப் பயன்படுத்தி 10 அர்ச்சகர் குடியிருப்புகள் பின்வருமாறு கட்டித்தரப்பட்டுள்ளன.

வ. எண்.	மாவட்டம்	குடியிருப்புகள் எண்ணிக்கை
1.	திருவள்ளூர்	2
2.	தேனி	1
3.	மதுரை	3
4.	திண்டுக்கல்	4
	மொத்தம்	10

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : படித்து பதிவு செய்யப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறநிலையத்துறைக்குச் சொந்தமான இடங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு பெறுவதில் தடையின்மைச் சான்றிதழ் குறித்து.

1.	வரிசை எண்.	:	12
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	128 / 2002
4.	பொருள்	:	அறநிலையத்துறைக்குச் சொந்தமான இடங்களில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு பெறுவதில் தடையின்மைச் சான்றிதழ் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	7644
	நாள்	:	10.04.2002
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.மீ.அ. வைத்தியலிங்கம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ...அரசு நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களில் கூட்டமாக ஆக்கிரமித்து நீண்டகாலமாக குடியிருந்து வருபவர்களை வரன்முறைப்படுத்த அரசாணை நிலை எண்.340, தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை நாள்: 06.08.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் அரசாணை (நிலை) எண்.353, தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள்: 04.06.1999–ல் கண்டுள்ளபடி வாடகை நிர்ணயத்தை ஏற்றுக்கொண்டு 01.07.1998 முதல் உள்ள மொத்த நிலுவைத் தொகையை கணக்கிட்டு 12 மாதங்களில் 12 சம தவணைகளில் செலுத்த வேண்டும் என்றும் நியாய வாடகையில் 10 மாத வாடகையை நன்கொடையாக அளிக்க வேண்டும் என்றும் மேற்கண்ட அடிப்படையில் முதல் தவணை நிலுவையையும் நடப்பு மாத வாடகையையும் செலுத்தும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு மின்வசதி மற்றும் ஏனைய வசதிகளுக்காக அனுமதி பெற தடையில்லாதச் சான்று வழங்கலாம் என

ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி அறநிலையத் துறைக்கு சொந்தமான இடங்களில் குடியிருந்து வருபவர்கள் வாடகை செலுத்தினால் மின்இணைப்பு பெறுவதற்கு மறுப்பின்மைச் சான்று வழங்கப்படும்.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழகத்தில் அதிக வருவாய் உள்ள மற்றும் உபரி வருவாய் உள்ள கோயில்களின் நிதியைப் பெற்று மற்ற கோயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்கு அரசு 50 சதவிகிதம் உபரி நிதியிலிருந்து செலவழிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	13
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	438 / 2004
4.	பொருள்	:	தமிழகத்தில் அதிக வருவாய் உள்ள மற்றும் உபரி வருவாய் உள்ள கோயில்களின் நிதியைப் பெற்று மற்ற கோயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்கு அரசு 50 சதவிகிதம் உபரி நிதியிலிருந்து செலவழிப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	48862
	நாள்	:	17.11.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.டி. சுதர்சனம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ...நிதி ஆதாரம் உள்ள ஆலயங்களில் இருந்து நிதியைப் பெற்று அங்கு இருக்கக்கூடிய பக்தகோடி மக்களுடைய நிதியைப்பெற்று பல்வேறு ஆலயங்கள் திருப்பணி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள நிதிவசதியற்ற திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதியுதவி பெற்று திருப்பணிகள் செய்யும் திட்டத்தின் கீழ் 147 திருக்கோயில்களுக்கு ரூ.579.65 இலட்சம் நிதிமாற்றம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திருப்பணித் திட்டத்தின் கீழ் 28 திருக்கோயில்களில் திருப்பணிகள் முடிவு பெற்றுள்ளது. 20 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது. எஞ்சிய திருக்கோயில்களின் திருப்பணியினை துவக்கி பணிவிரைந்து முடித்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நிதிவசதி மிக்க

திருக்கோயில்களின் நிதியிலிருந்து நிதி ஆதாரம் வழங்கி நிதிவசதியற்ற திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்று வருவது இந்துசமய அறநிலையத் துறையின் தொடர் நிகழ்வு ஆகும்.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது



பத்து திருக்கோயில்களுக்குச் சொந்தமான பழுதடைந்த மரத்தேர்களை புதுப்பித்து தேர்த்திருவிழா நடத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	14
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	213 / 2005
4.	பொருள்	:	பத்து திருக்கோயில்களுக்குச் சொந்தமான பழுதடைந்த மரத்தேர்களை புதுப்பித்து தேர்த்திருவிழா நடத்துவது குறித்து.
5.	2005–2006–ம் ஆண்டுக்கான இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.சி. இராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ...நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான 830 தேர்களில் 2001–2002–ம் ஆண்டு முதல் 2004–2005–ம் ஆண்டு வரை 140 திருத்தேர்களும் 2005–2006–ம் ஆண்டில் 11 திருத்தேர்களும் செப்பனிடப்பட்டுள்ளன. அரசு உறுதிமொழியினை நிறைவேற்றம் செய்திடும் வகையில் பின்வரும் திருத்தேர்கள் செப்பனிடப்பட்டுள்ளன. 1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், நாணமேடு கடலூர் வட்டம், 2. அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், திருநாகஸ்வரம், கும்பகோணம் வட்டம், 3. அருள்மிகு நேந்திரோ தாரஜீனேஸ்வர சுவாமி திருக்கோயில் பணயபுரம், விழுப்புரம் வட்டம், 4. அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில் போரூர், கோவை

5. அருள்மிகு காசி விஸ்வநாத சுவாமி, திருக்கோயில் பவானி ஈரோடு மாவட்டம்

6. அருள்மிகு மகுடேஸ்வரர் மற்றும் வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில் கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

7. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்

8. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி

9. அருள்மிகு கள்ளபிரான் திருக்கோயில், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம்

10. அருள்மிகு ஆதிநாத ஆழ்வார் திருக்கோயில், ஆழ்வார் திருநகர், தூத்துக்குடி மாவட்டம்

11. அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில், பேரையூர், திருச்சி மாவட்டம்

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்துதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	15
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	403 / 2005
4.	பொருள்	:	டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்துதல் குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சரின் விவாதம்	:	
	நாள்	:	07.04.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.வி.கே. லட்சுமணன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் ...கோரிக்கை பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயா அவர்கள் வாழ்ந்த இல்லத்தை புதுப்பொலிவுடன் புதுப்பிக்க ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.23.00 இலட்சத்தில் புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு 15.11.2007 நாளிட்ட கடிதத்தில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

இலக்கிய பேராசான் ஜீவா அவர்களுடைய நூலினை நாட்டுடைமையாக்குதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	16
2.	துறையின் பெயர்	:	தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	404 / 2005
4.	பொருள்	:	இலக்கிய பேராசான் ஜீவா அவர்களுடைய நூலினை நாட்டுடைமையாக்குதல் குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	07.04.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. வை. சிவபுண்ணியம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர் ...கோரிக்கை பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இலக்கியப் பேராசான் ப.ஜீவானந்தம் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 28.05.1998 அன்று அறிவிக்கப்பட்டு, அதற்கிணங்க நூல்களை நாட்டுடைமையாக்கி, அவரின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகை ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட அரசாணை வெளியிடப்பட்டு, (அரசாணை 3டி)எண்.4, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்(துவ1–1) துறை, நாள்: 12.08.1998 உரிய பரிவுத்தொகை அவரின் மரபுரிமையர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கோயம்பத்தூர் மாவட்டம், பேரூர் பட்டிஸ்வரர் ஈச்சனாரி விநாயகர் கோயில்களின் செயல் அலுவலர் பதவியை உதவி ஆணையர் பதவி நிலைக்கு உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	17
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	143 / 2006
4.	பொருள்	:	கோயம்பத்தூர் மாவட்டம், பேரூர் பட்டிஸ்வரர் ஈச்சனாரி விநாயகர் கோயில்களின் செயல் அலுவலர் பதவியை உதவி ஆணையர் பதவி நிலைக்கு உயர்த்துவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	75516
	நாள்	:	27.01.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திருமதி.எ.எஸ். மஹேஸ்வரி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.பி.சி. ராமசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ...நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இந்து சமய அறநிலையத்துறையில் 16 திருக்கோயில்களின் செயல் அலுவலர் பதவிகளை உதவி ஆணையர் நிலைக்கு உயர்த்தி, அரசாணை (நிலை) எண்.469, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள்:25.09.1998–ல் ஆணையிடப்பட்டது. பின்பு இத்திருக்கோயில்களை உதவி ஆணையர் நிலையில் இயக்க அரசாணை (நிலை) எண்.54, தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்:09.04.2003–ல் ஆணையிடப்பட்டது. இந்த 16 திருக்கோயில்களில் மேற்படி கோவை மாவட்டம் ஈச்சனாரி அருள்மிகு விநாயகர் திருக்கோயில் மற்றும் பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில்களின் செயல் அலுவலர் பதவிகளும் அடங்கும். மேற்படி ஆணைகள்படி உதவி ஆணையர் நிலையில் இயக்க அனுமதிக்கப்பட்ட 16 திருக்கோயில்களில் 4 திருக்கோயில்கள் மட்டும் உதவி ஆணையர் நிலையில் இயக்கப்பட்டு வந்ததால் புதிய வருமான அடிப்படையில் சில திருக்கோயில்களையும் சேர்த்து

இயக்கப்படாமல் உள்ள திருக்கோயில்களை உதவி ஆணையர் நிலையில் இயக்க 16 திருக்கோயில்களடங்கிய புதிய கருத்துருவை ஆணையர் அளித்தார். இதில் மேற்படி கோயம்புத்தூர் ஈச்சனாரி அருள்மிகு விநாயகர் திருக்கோயில் மற்றும் பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில்களும் உள்ளன. மேற்படி கோயம்பத்தூர் ஈச்சனாரி அருள்மிகு விநாயகர் திருக்கோயில் மற்றும் பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயில்கள் ஏற்கனவே உதவி ஆணையர் நிலைக்கு உயர்வு செய்யப்பட்டு, இயக்கப்படாமல் இருந்த நிலையில், அவற்றை உதவி ஆணையர்/செயல் அலுவலர் நிலையில் இயக்க அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண்.465, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள்:21.11.2007–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருவலஞ்சுழி அருள்மிகு சுவேத விநாயகர் மற்றும் சுபர்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	18
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	705 / 2006
4.	பொருள்	:	தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருவலஞ்சுழி அருள்மிகு சுவேத விநாயகர் மற்றும் சுபர்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடகுழுக்கு விழா நடத்துவது குறித்து
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	18.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ...திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருவலஞ்சுழி அருள்மிகு சுவேத விநாயகர் மற்றும் சுபர்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.67.30 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 75 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன. விரைவில் குடமுழுக்கு விழா நடத்துவதற்கு நடவடிக்கை திருக்கோயில் நிர்வாகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்தில் ஆதிதிராவிடர்கள் வாழும் 2000 கிராமங்கள் தேர்வு செய்து அவை ஒவ்வொன்றிலும் ஒரு திருக்கோயிலை பழுதுபார்க்க அல்லது புதியதாக கட்டுவதற்காக நிதியுதவி அளிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	19
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	708 / 2006
4.	பொருள்	:	தமிழகத்தில் ஆதிதிராவிடர்கள் வாழும் 2000 கிராமங்கள் தேர்வு செய்து அவை ஒவ்வொன்றிலும் ஒரு திருக்கோயிலை பழுதுபார்க்க அல்லது புதியதாக கட்டுவதற்காக நிதியுதவி அளிப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை – இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	18.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
			...ஒவ்வொன்றிலும் ஒரு திருக்கோயிலை பழுது பார்க்கவோ அல்லது புதிதாக கட்டுவதற்கோ ரூ.25 ஆயிரம் நிதியுதவி அளிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	ஒவ்வொரு ஆண்டும் அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்துதான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் வசிக்கும் பகுதியிலுள்ள இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களுக்கு மட்டும் இத்திருப்பணி திட்டத்தின் கீழ் திருக்கோயில் 1–க்கு ரூ.25,000/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டு 6000 திருக்கோயில்களுக்கும், 2005–2006 ஆம் ஆண்டு 5872 திருக்கோயில்களுக்கும், ஒரு

திருக்கோயிலுக்கு ரூ.25,000/- வீதம் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதிவசதி மிக்க பிற திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து திருக்கோயில் 1-க்கு ரூ.25,000/- வீதம் 5265 திருக்கோயில்களுக்கு ரூ.13,16,25,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 1955 திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோவில் மனைகளில் குடியிருப்பவர்களுக்கு வாடகையைக் குறைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	20
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	724 / 2006
4.	பொருள்	:	கோவில் மனைகளில் குடியிருப்பவர்களுக்கு வாடகையைக் குறைப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	18.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.வை. சிவபுண்ணியம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
			...மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி பரிசீலிக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்கு சொந்தமான வீடுகள், நிலங்கள்,கடைகள் மற்றும் காலி இடங்களில் குடியிருப்பவர்களுக்கு முதலமைச்சர் தலைமையிலான ஆலோசனைக் குழுவின் முடிவின்படி, அரசாணை (நிலை) எண்.353, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள்:04.06.1999–ன்படி குடியிருப்பு இனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை விகிதமான 0.20 விழுக்காட்டினை 0.10 விழுக்காடாக குறைத்தும், மேலும் அனைத்து இனங்களுக்கும் பொதுவாக மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்தப்படும் வாடகை உயர்வு 33.3 விழுக்காட்டினை 15 விழுக்காடாக குறைத்து நிர்ணயம் செய்யவும் அரசாணை (நிலை) எண்.456, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள்: 09.11.2007– ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

நட்சத்திர தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் பிரதியை உணவு விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	21
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
3.	உறுதிமொழி எண்.	:	1028 / 2006
4.	பொருள்	:	நட்சத்திர தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் பிரதியை உணவு விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க நடவடிக்கை எடுப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் மீது விவாதம் மற்றும் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	25.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர் ...திருக்குறள் பிரதியை உணவக விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	நட்சத்திரத் தகுதி பெற்ற உணவக விடுதிகள், புதுதில்லி தமிழ்நாடு இல்லம் மற்றும் தமிழ்நாடு அரசு விருந்தினர் இல்ல அறைகளில் ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூலினை அறைகளில் வைக்கும் திட்டத்திற்காக 2006–2007 ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக 1000 படிகள் விலைக்கு வாங்க ரூ.1.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசாணை எண்.19, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள்: 19.01.2007 இல் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடான திரு.எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களின் திருக்குறள்

ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் 1000 படிகள் ரூ.1.00 இலட்சம் செலவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்ட அந்நூல்கள் நட்சத்திரத் தகுதி பெற்ற உணவக விடுதிகள் மற்றும் அரசு விருந்தினர் இல்லங்களின் அறைகளில் வைப்பதற்கு 15.06.2007 அன்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது



தமிழ் பேரகராதி திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	22
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	905 / 2007
4.	பொருள்	:	தமிழ் பேரகராதி திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதித்துறை அமைச்சர்
			... ஆய்வறிஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் சென்னை பல்கலைக் கழக தமிழ் பேரகராதியை (Tamil Lexicon) கூர்ந்தாய்வு செய்து பதுக்கியும், பெருக்கியும் வெளியிடும் பணிக்காக சென்னை பல்கலைக் கழகத்திற்கு பல்கலைக்கழக நல்கைக் குழுவின் நிதி பங்களிப்பை எதிர்நோக்கி இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் வழங்கப்பெறும்.
8.	துறையின் பதில்	:	இதன் தொடர்பில் அரசாணை எண்.402, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் (தவ1–1) துறை, நாள்:14.09.2007–இல் ரூ.10.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவி வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	23
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	907 / 2007
4.	பொருள்	:	திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவி வழங்குவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதித் துறை அமைச்சர் ...திராவிட பல்கலைக் கழகத்தில் பிற திராவிட மொழிகளுடனான ஒப்பாய்வு திட்டப் பணிகளுக்கும் தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழி இலக்கியங்களை தமிழ் மொழியிலும் மொழி பெயர்த்திடும் திட்டப் பணிகளுக்காக இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் வழங்கப்பெறும்.
8.	துறையின் பதில்	:	இதன் தொடர்பில் அரசாணை எண்.377, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்(குவ1–1) துறை, நாள்: 30.08.2007 இல் ரூ.10.00 இலட்சம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருளுக்குப் பரிசு அளிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	24
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி அறநிலையம் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	910 / 2007
4.	பொருள்	:	தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள்களுக்குப் பரிசு அளிப்பது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதித்துறை அமைச்சர்
			... கணினி யுகத்திற்கேற்ப தமிழ் வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றை தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்கு கணியன் பூங்குன்றனார் பெயரில் பரிசுத் தொகை ரூ.1 இலட்சம் வழங்குவதுடன் அந்த நிறுவனத்திற்கு பாராட்டிதழும் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	கணினி யுகத்திற்கேற்ப தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்கு கணியன் பூங்குன்றனார் பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000/–மும் பாராட்டிதழும் வழங்கலாம் என்றும், இப்பரிசுக்கு விண்ணப்பப்படிவம் அறுதி செய்தல், போட்டிக்குரிய மென்பொருள் முடிவு செய்தல், பரிசுக்குரிய மென்பொருளை அரசுக்கு பரிந்துரை செய்தல் தொடர்பான பணிகளை மின்னகராதி தயாரித்தல் தொடர்பான திட்டப் பணிகளுக்கு அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவே முடிவு செய்யலாம் என இத்துறை கருதி சற்றாணையில் ஆணை பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழ்வளர்ச்சி துறை அலுவலகத்திற்கு ஊர்தி வசதி அளித்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	25
2.	துறையின் பெயர்	:	தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை
3.	உறுதிமொழி எண்.	:	911 / 2007
4.	பொருள்	:	தமிழ்வளர்ச்சி துறை அலுவலகத்திற்கு ஊர்தி வசதி அளித்தல் குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	02.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதித் துறை அமைச்சர்
			...ரூ.66 இலட்சம் செலவில் ஊர்திகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்வளர்ச்சித் துறையில் உள்ள 3 தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர்களுக்கு தலா ஒரு அம்பாசிடர் ஊர்தி வீதம் மொத்தம் 3 அம்பாசிடர் ஊர்திகளை இந்துஸ்தான் மோட்டர் நிறுவனத்தின் மூலம் வாங்க, ஒரு அம்பாசிடர் ஊர்தியின் விலை ரூ.3,65,327/– வீதம் 3 அம்பாசிடர் ஊர்திகளுக்கு மொத்தம் ரூ.10,95,981/–ம் மற்றும் 10 மாவட்ட தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர்களுக்கு தலா ஒரு ஊர்தி வீதம் 10 பொலேரோ எல் எக்ஸ் ஊர்திகளை மகேந்திரா அண்டு மகேந்திரா நிறுவனத்தின் மூலம் வாங்க ஒரு பொலேரோ எல் எக்ஸ் ஊர்தியின் விலை ரூ.4,71,864/– வீதம் 10 ஊர்திகளுக்கு மொத்தம் ரூ.47,18,640/–ம் ஆக மொத்தம் ரூ.58,14,621/–யை தொடராச் செலவினமாகவும், மேற்படி ஊர்திகளின் பராமரிப்பு செலவிற்காக ஒரு ஊர்திக்கு ஆண்டுக்கு ரூ.2,000/– வீதமும் 13 ஊர்திகளுக்கு ரூ.26000/–மும், நிதி ஒப்பளிப்பு செய்தும், மேற்படி 13 ஊர்திகளுக்கு தேவையான எரிபொருள் மற்றும்

ஒட்டுநர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, அரசாணை (நிலை) எண்.451, தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, நாள்: 06.11.2007 இல் ஆணையிட்டது.

மேலும், சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி 2008–09 ஆம் நிதி ஆண்டுக்கு தமிழ்வளர்ச்சி இயக்ககத்திற்கு இரண்டாம் கட்டமாக 10 உதவி இயக்குநர்களுக்கு வாங்க மேற்கூறியதன்படி தேவையான நிதி ஒதுக்கத்தை 2008–09 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கோரி பெற தமிழ்வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 26.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப்பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

மதுரை திருமலை நாயக்கர் மகால், இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் நாயக்கர் தர்பார்ஹால், காஞ்சிபுரம் அருகிலுள்ள திருலோக்கியநாத ஜீவசுவாமி கோயில் தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை மற்றும் நாகர்கோவில் உதயகிரி கோட்டை ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணி குறித்து.

1.	வரிசை எண்.	:	26
2.	துறையின் பெயர்	:	சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	186 / 2003
4.	பொருள்	:	மதுரை திருமலை நாயக்கர் மகால், இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் நாயக்கர் தர்பார்ஹால், காஞ்சிபுரம் அருகிலுள்ள திருலோக்கியநாத ஜீவசுவாமி கோயில், தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை மற்றும் நாகர்கோவில் உதயகிரி கோட்டை ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணி குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டிற்கான கல்வித்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்
			... மதுரை திருமலை நாயக்கர் மகால், இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் நாயக்கர் தர்பார்ஹால், காஞ்சிபுரம் அருகிலுள்ள திருலோக்கியநாத ஜீவசுவாமி கோயில் தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை மற்றும் நாகர்கோவில் உதயகிரி கோட்டை ஆகியவற்றைப் புதுப்பிக்கும் பணி ரூ.240.17 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.
8.	துறையின் பதில்	:	மதுரை திருமலை நாயக்கர் மகால், இராமநாதபுரம் இராமலிங்க விலாசம் அரண்மனை, தஞ்சாவூர் நாயக்கர் தர்பார்ஹால், காஞ்சிபுரம் அருகிலுள்ள திருலோக்கியநாத ஜீவசுவாமி கோயில், தரங்கம்பாடி டேனிஷ்கோட்டை மற்றும் நாகர்கோவில் உதயகிரி கோட்டை ஆகியவற்றின் பணி முழுவதும் பொதுப்பணித் துறையால் முடிக்கப்பட்டு விட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம் கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	27
2.	துறையின் பெயர்	:	சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	1030 / 2006
4.	பொருள்	:	கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம் கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் அமைப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	25.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர் ...கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	கன்னியாகுமரியில் நிரந்தர கலைக்கூடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சிறப்பு நிலை பேரூராட்சிக்கு சொந்தமான இடத்திற்கு மாத வாடகையாக ரூ.58,400/–என வரையறை செய்துள்ளனர். கலைக்கூடம் அமைப்பதற்கான தொடராச் செலவினமே ரூ.1.50 இலட்சம் தான் அமைப்புச் செலவினத்தை விட வாடகைத்தொகை மிகுதியாக இருக்கின்றது. எனவே, மேலும் ஊதியம் உள்ளிட்ட தொடர் செலவினம் ரூ.3.00 இலட்சத்தில் வாடகை ஒதுக்கீடு செய்ய இயலாது. எனவே, வாடகைக்கு இடம் கிடைக்கத் தக்க சூழல் அமையும் வரை கன்னியாகுமரியில் நிலையான கலைக்கூடம் அமைக்கும் திட்டத்தைக் கைவிடலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. மேலும், இதனை கன்னியாகுமரியில் அமைப்பதற்கு மாற்றாக சென்னை அரசு கவின் கலைக்கல்லூரியில் அமைக்கலாம் என அரசு பரிசீலித்து வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	26.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது



மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

நகராட்சியிலுள்ள மருந்தகங்களை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	28
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	34/98
4.	பொருள்	:	நகராட்சியிலுள்ள மருந்தகங்களை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	7681
	நாள்	:	20.03.1998
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.கு. ரவிஅருணன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர்
			...இதைப்பற்றி அமைச்சரவை கூடி இது குறித்து விவாதித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	நகராட்சி எல்லையில் ஏற்கனவே ஒரு மருத்துவமனை செயல்படும் நிலையில் நகராட்சி மருந்தகங்களை அரசு மருத்துவமனையாக உயர்த்துவதற்கு சாத்தியக்கூறு ஏதுமில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPH

தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகள் சில செயல்படாமல் இருப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	29
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	627/2000
4.	பொருள்	:	தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகள் சில செயல்படாமல் இருப்பது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்.	:	18781
	நாள்	:	11.05.2000
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.ஐ. கணேசன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்துறை அமைச்சர் ...சேலம் மாவட்டத்தில் 1 ஆரம்ப சுகாதார நிலையமும் கடலூர் மாவட்டத்தில் 14 ஆரம்ப சுகாதார நிலையங்களும் தண்ணீர் மின்சார வசதிகள் இணைப்பு வழங்கப்படாத காரணத்தினால் செயல்படாது உள்ளது. கூடிய விரைவில் தேவையான வசதிகள் செய்யப்பட்டு இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் டேனிடா திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனைகள் ஏதும் கட்டப்படவில்லை. சேலம், கடலூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் டேனிடா திட்டத்தின் கீழ் துணை சுகாதார நிலையங்கள் கட்டப்பட்டு அவைகள் செயல்பட்டு வருகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மாவட்ட தலைமையிடங்களில் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	30
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	138/2003
4.	பொருள்	:	மாவட்ட தலைமையிடங்களில் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்குவது குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ.செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் ...அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	மாவட்ட தலைமையிடங்களில் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்குவது குறித்த உறுதி மொழிக்கிணங்க 2003 ஆம் ஆண்டில் புதியதாக, அரசு மருத்துவமனைகளில் 12 செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன மேலும் 9 செவிலியர் பயிற்சி பள்ளிகளிலும், கூடுதலாக 50 மாணவர்கள் எண்ணிக்கை சேர்க்கப்பட்டு மொத்தம் தமிழ்நாட்டில் அரசு செவிலியர் பயிற்சி பள்ளிகளில் 1,795 மாணவர்கள் ஆண்டு தோறும் பயிற்சிப் பெற்று வருகின்றனர். அரசு ஆணை (நிலை) எண்.118, சுகாதாரம், நாள்: 06.07.2006–ன்படி அனைத்து மாவட்டங்களிலும் தனியார் செவிலியர் பயிற்சி பள்ளிகள் தொடங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் தற்பொழுது சுமார் 150 செவிலியர் பயிற்சி பள்ளிகள் இயங்கி வருகின்றன. எனவே, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாணவ, மாணவியர்கள் செவிலியர் பயிற்சி கல்வி பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

திருநெல்வேலி, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு வலுப்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	31
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	148/2003
4.	பொருள்	:	திருநெல்வேலி, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு வலுப்படுத்துவது குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	4–4–2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்
			... திருநெல்வேலி, மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் வலுப்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	திருநெல்வேலி மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இருதயநோய் சிகிச்சைப் பிரிவினை வலுப்படுத்துவதற்காக, அரசு ஆணை எண் 728 மக்கள் நல்வாழ்வு நாள்: 22–5–2003–ன் மூலம் ரூ.24 இலட்சம் ஒப்பளிப்பு பெறப்பட்டு தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் கடித ந.க.எண் 790/TNMSC/Engg/04, நாள்: 3–7–2000 மூலம் கார்டியோகிராம் மற்றும் கலர் பிராஸசிங் கருவி வாங்க தேவைப்பட்டியல் பெற்று ட்ரிவிட்ரான் மெடிக்கல் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை மூலம் வழங்கல் ஆணை பெறப்பட்டு முறையே 29–07–2004 மற்றும் 16–9–2004 அன்று நிறுவப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கும்பகோணம் தலைமையிட மருத்துவமனையில் புறநோயாளிப் பிரிவு தொடங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	32
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	163 / 2003
4.	பொருள்	:	கும்பகோணம் தலைமையிட மருத்துவமனையில் புறநோயாளிப் பிரிவு தொடங்கப்படுவது குறித்து.
5.	2003–2004 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	04.04.2003
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர் ... கும்பகோணம் தலைமையிட மருத்துவமனையில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிப் பிரிவு ஒன்று கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	2003–2004 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.15 இலட்சம் செலவில் கும்பகோணம் அரசு தலைமையிட மருத்துவமனையின் புறநோயாளர் பிரிவை விரிவாக்கம் செய்து கட்டுவதற்கு அரசு ஆணை 2(டி) எண்.22, சுகாதாரம், நாள்: 23.05.2003–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டு இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 20.07.2005 முதல் செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சென்னை, தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பட்ட மேற்படிப்பு கட்டடத் தொகுதியில் கூடுதல் தளம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	33
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	146/2004
4.	பொருள்	:	சென்னை, தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பட்ட மேற்படிப்பு கட்டடத் தொகுதியில் கூடுதல் தளம் கட்டுவது குறித்து.
5.	2004-2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ...பட்ட மேற்படிப்பு கட்டடத் தொகுதியில் தற்போதுள்ள முதல் தளத்திற்கு மேலே ரூ.80 இலட்சம் மொத்தச் செலவிலே கூடுதல் தளம் ஒன்று கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பட்ட மேற்படிப்பு கட்டடத் தொகுதியில் முதல் தளத்திற்கு மேலே ரூ.80/- இலட்சம் செலவில் தளம் கட்டுவதற்கு 2004-05 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் அரசு ஆணை (நிலை) எண்.278 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 03.08.2004-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு 08.06.2005 அன்று 72.30 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அக்கல்லூரி முதல்வர் வசம் ஒப்படைக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	34
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	148/2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ...தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரூ.150 இலட்சம் செலவிலே கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	2004–2005 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.150 இலட்சம் செலவில் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டாய உள்ளுறை பயிற்சியாளர் குடியிருப்பு கட்டுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்.279 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 03.08.2004–ல் ஒப்புதல் வழங்கப்பட்டு இக்கட்டிடம் ரூ.124.36 இலட்சம் செலவிலே கட்டி முடிக்கப்பட்டு 10.04.2006 அன்று துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	35
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	149 / 2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... தூத்துக்குடி மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ரூ.160 இலட்சம் மொத்த செலவிலே மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	2004–2005 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.160 இலட்சம் செலவில் மகளிருக்காக கூடுதல் மாணவியர் விடுதி கட்டுவதற்கு அரசு ஆணை நிலை எண்.282, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 03.08.2004–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.127.95 இலட்சம் செலவிலே மாணவியர் விடுதி 24.02.2006 அன்று கட்டி முடிக்கப்பட்டு துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்தில் மின் தூக்கி புதுப்பிக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	36
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	152/2004
4.	பொருள்	:	சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்தில் மின் தூக்கி புதுப்பிக்கப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்திலே ரூ.20 இலட்சம் மொத்த செலவில் ஒரு மின் தூக்கி புதுப்பிக்கப்படும் மற்றும் புதிதாக வாங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடத்தில் ஒரு மின் தூக்கி மாற்றி புதிதாக அமைப்பதற்கு ரூ.20 இலட்சம் 2004–2005 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு, மின் தூக்கி நல்ல முறையில் இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் மயக்க மருந்தியல் துறை வலுப்படுத்தப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	37
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	153/2004
4.	பொருள்	:	சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் மயக்க மருந்தியல் துறை வலுப்படுத்தப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ.20 இலட்சம் மொத்தச் செலவிலே மயக்க மருந்தியல் துறை வலுப்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை எண்.254 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 03.05.2004, பகுதி–2 திட்டத்தின்கீழ், ரூ.20 இலட்சம் சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை மயக்க மருந்தியல் துறை வலுப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இத்துறைக்கான கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் வாயிலாக பெறப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சென்னை தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு விரிவுப்படுத்தப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	38
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	154/2004
4.	பொருள்	:	சென்னை தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு விரிவுப்படுத்தப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... சென்னை தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு ரூ.6.50 இலட்சம் மொத்த செலவிலே விரிவுப்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	2004–2005 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் சென்னை, தாம்பரம் அரசினர் நெஞ்சக நோய் மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு ரூ.6.50 இலட்சம் மொத்த செலவிலே விரிவுப்படுத்த அரசு ஆணை (நிலை) எண்.261 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 03.08.2004–ல் ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.6,23,832 மொத்த செலவில் பணிகள் மார்ச் 2005–இல் முடிக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	39
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	156/2004
4.	பொருள்	:	தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் மொத்த செலவிலே விலங்ககம் (Animal House) ஒன்று கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	2004–2005 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ.60 இலட்சம் செலவில் விலங்ககம் ஒன்று கட்டுவதற்கு அ.ஆ.நிலை.எண்.275, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 03.08.2004–இல் ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.52.85 இலட்சம் செலவிலே விலங்ககம் 01.12.2005 அன்று கட்டி முடிக்கப்பட்டு துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சீர்காழி மற்றும் ஆண்டிப்பட்டி அரசு வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	40
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	159/2004
4.	பொருள்	:	சீர்காழி மற்றும் ஆண்டிப்பட்டி அரசு வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... சீர்காழி மற்றும் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசு வட்ட தலைமையிட மருத்துவமனையிலே ரூ.64 இலட்சம் செலவில் புறநோயாளிகளுக்கான கட்டடம் கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	2004–2005 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் சீர்காழி மற்றும் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் வெளிநோயாளிகள் பிரிவு ரூ.64.00 இலட்சம் (தலா 32 இலட்சம்) கட்டுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்.287 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 03.08.2004–ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. சீர்காழி அரசு மருத்துவமனையில் புதிய புறநோயாளிகள் பகுதி கட்டடம் ரூ.32 இலட்சம் செலவில் பொதுப் பணித்துறை மூலம் கட்டப்பட்டு 20.10.2005 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் புதிய புறநோயாளிகள் பகுதி கட்டடம் ரூ.32 இலட்சம் செலவில் பொதுப் பணித்துறை மூலம் கட்டப்பட்டு 12.11.2005 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது



மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாச்சலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 6 அவசர ஊர்திகள், அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	41
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	162 / 2004
4.	பொருள்	:	மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாச்சலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 6 அவசர ஊர்திகள், அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வாங்கப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... ஆகிய வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள 6 அவசர ஊர்திகள் அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக ரூ.24.00 இலட்சம் செலவில் புதிய ஊர்திகள் வாங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாடு சுகாதார சேவை திட்டத்தின் மூலம் மயிலாடுதுறை, சிவகாசி, மானாமதுரை, விருத்தாச்சலம், ஏற்காடு மற்றும் முதுகுளத்தூர் ஆகிய ஆறு வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் உள்ள அவசர ஊர்திகள், அமரர் ஊர்திகளுக்குப் பதிலாக புதிய ஊர்திகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு (Laparoscope) கருவிகள் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	42
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	164/2004
4.	பொருள்	:	மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு (Laparoscope) கருவிகள் வழங்கப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு ரூ.50.00 இலட்சம் செலவிலே (Laparoscope) கருவிகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	2004–2005 ஆம் ஆண்டு திட்ட இரண்டின்படி (Part-II Scheme) ரூ.50 இலட்சத்திற்கு தமிழ்நாடு அரசு மருத்துவக் கழகத்தின் மூலம் 19 லேப்ராஸ்கோப் கருவிகள் வாங்கப்பட்டு மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை மேம்பாட்டிற்கு கீழ்காணும் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1.	கடலூர்	1
2.	விழுப்புரம்	2
3.	காஞ்சிபுரம்	2
4.	மதுரை	1
5.	திருநெல்வேலி	1
6.	இராமநாதபுரம்	1
7.	நாகர்கோவில்	1
8.	பெரம்பலூர்	1
9.	வேலூர்	1
10.	திருவண்ணாமலை	1
11.	நாகப்பட்டினம்	1
12.	தஞ்சாவூர்	1
13.	தூத்துக்குடி	1
14.	தர்மபுரி	1
15.	திருவள்ளூர்	1
16.	தேனி	1
17.	திருவாரூர்	1
	மொத்தம்	19

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	43
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	165/2004
4.	பொருள்	:	சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படுவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியிலே மொத்தம் ரூ.15.00 இலட்சம் செலவிலே பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	சென்னை அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கீழ்க்கண்ட பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.. 1. முதல்வர் – 1 பணியிடம் 2. உதவி விரிவுரையாளர்/உதவி மருத்துவ அலுவலர் – 10 3. பகுதி நேர விரிவுரையாளர் – 7 4. அழைப்பு (Guest) விரிவுரையாளர் – 3 5. அழைப்பு (Guest) ரீடர் – 2 6. மருத்துவமனை பணியாளர் – 1

இப்பணியிடங்களில் 3 விரிவுரையாளர் பணியிடங்கள் முறையான சம்பள விகிதத்திலும் ஏழு விரிவுரையாளர் பணியிடங்கள் ரூ.12,000/- தொகுப்பு ஊதியத்திலும் நிரப்பப்பட்டுள்ளது. பகுதிநேர விரிவுரையாளர் பணியிடம் இரண்டும் நிரப்பப்பட்டுள்ளது. மருத்துவமனை பணியாளர் பணியிடம் நிரப்பப்பட்டுவிட்டது. முதல்வர் பணியிடம் பணி விதிகள் வெளியிட்டப்பின் நிரப்பப்படும். தற்போது இப்பதவி உதவி விரிவுரையாளர் பொறுப்பில் உள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது



சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு நிழல்படி பெருக்கி சாதனம் (Xerox machine) வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	44
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	166/2004
4.	பொருள்	:	சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு நிழல்படி பெருக்கி சாதனம் (Xerox machine) வழங்குவது குறித்து.
5.	2004–2005 ஆம் ஆண்டிற்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	26.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... ரூ.1.00 இலட்சம் செலவிலே நிழல்படி பெருக்கி சாதனம் (Xerox machine) வாங்கி வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நிழல்படி பெருக்கி (Xerox machine) சாதனம் வாங்க 2004–2005–ம் ஆண்டின் பகுதி-I-ம் திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து 04.08.2004–ம் நாளிட்ட அரசாணை 2(D) எண். 43–ல் ஆணை வெளியிடப்பட்டு, சாதனம் வாங்கி துறையில் நிறுவப்பட்டு 30.09.2004 முதல் செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சர்க்கரையின் அளவை கண்டுபிடிக்கும் கருவி (Glucometer) யை வாங்கி வைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	45
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	227/2004
4.	பொருள்	:	அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சர்க்கரையின் அளவை கண்டுபிடிக்கும் கருவி (Glucometer) யை வாங்கி வைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா துணை வினா	:	8664
	நாள்	:	29.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.பி.ஆர். சுந்தரம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செமி ஆட்டோ அனலைசர் எனும் நவீன கருவி வாங்கி வழங்கப்படும் என சட்டமன்றப் பேரவையில் 2006–2007 வரவு–செலவு அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதால் அதன்படி முதற்கட்டமாக 385 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செமி ஆட்டோ அனலைசர்கள் ரூ.5.77 கோடி செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் நிதியாண்டுகளில் வழங்கப்படும். இக்கருவியினால் ஒரே சமயத்தில் 100 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்ய இயலும் ஆனால் குளுக்கோ மீட்டர் கருவியினால் ஒரு நபருக்கு சர்க்கரையின் அளவை மட்டுமே கண்டறிய இயலும். எனவே, குளுக்கோ மீட்டரை காட்டிலும் செமி ஆட்டோ அனலைசர் சிறந்தது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கிராமப்புறங்களிலே இருக்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலே முழுவதுமாகப் பெண் மருத்துவர்களையே நியமனம் செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	46
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	258/2004
4.	பொருள்	:	கிராமப்புறங்களிலே இருக்கக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலே முழுவதுமாகப் பெண் மருத்துவர்களையே நியமனம் செய்வது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	45270
	துணை வினா		
	நாள்	:	30.07.2004
6.	உறுப்பினர் பெயர்	:	டாக்டர் சி. விஜயபாஸ்கர்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... கூடிய விரைவிலே அதற்கு நிதி கிடைக்கும். எனவே, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தற்போது தமிழ்நாட்டில் 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்களுக்கு நியமிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை 3266. 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது 30% மேலாக பெண் மருத்துவர்கள் பணியில் உள்ளனர். முழுவதுமாக பெண் மருத்துவர்களையே நியமனம் செய்யும் கொள்கை முடிவு ஏதும் இதுவரை எடுக்கப்படவில்லை.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்பட்ட சித்த மருத்துவர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	47
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	440/2004
4.	பொருள்	:	ஆரம்ப சுகாதார நிலையங்களில் நியமிக்கப்பட்ட சித்த மருத்துவர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	48696
	நாள்	:	17.11.2004
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. குபிச்சாண்டி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... மாண்புமிகு உறுப்பினர் கூறியது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை (வர) எண்.880, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்:14.07.2005-ல் ஒரு நபருக்கு அரசாணை எண்.220, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்:31.08.2005-ல் 20 நபர்களுக்கும் ஆக மொத்தம் 21 நபர்களுக்கு கேட்கப்பட்ட ஓராண்டு காலத்திற்கு சம்பளம் வழங்கப்பட்டுவிட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 2322 மருத்துவர் பணியிடங்களை நிரப்புவது குறித்து.

1.	வரிசை எண்.	:	48
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	67/2005
4.	பொருள்	:	அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள 2322 மருத்துவர் பணியிடங்களை நிரப்புவது குறித்து.
5.	ஆளுநர் பேரூரையின் மீது விவாதம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை	:	
	நாள்	:	07.02.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கு.பிச்சாண்டி
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா, முதல் அமைச்சர் ... இப்பணியிடங்கள் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் நிரப்பப்பட்டுவிடும்.
8.	துறையின் பதில்	:	தற்போது உள்ள அரசு பதவி ஏற்றபின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தெரிவு செய்யப்பட்ட 1,535 மருத்துவர்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 475 மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு படித்து முடித்த 201 மாணவர்கள் (Non-Service Candidate) காலியாக இருந்த பணியிடங்களில் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், ஒருங்கிணைந்த அவசர மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு மையங்களில் 119 மருத்துவர்களும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் 83 மருத்துவர்களும், நடமாடும் மருத்துவக் குழுக்களுக்கு 100 மருத்துவர்களும் ஆக மொத்தம் 2,513 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவை போக காலியாகவுள்ள மருத்துவப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
9..	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மூலிகை மருந்துகளிலே நிரந்தரமாக நோயினைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மக்கள் பயன்படுத்துவதற்குச் செயல் திட்டம் வகுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	49
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	123/2005
4.	பொருள்	:	மூலிகை மருந்துகளிலே நிரந்தரமாக நோயினைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மக்கள் பயன்படுத்துவதற்குக் செயல் திட்டம் வகுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	35435
	துணை வினா		
	நாள்	:	08.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. கே. ஆறுமுகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... கண்டிப்பாக அரசு அதற்கு நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	நிரந்தரமாக நோய்த் தீர்க்கும் மூலிகைகளைக் கொண்டே இந்திய மருத்துவத் துறையில் மருந்துகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	50
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	190/2005
4.	பொருள்	:	புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	35925
	நாள்	:	17.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. லா. சந்தானம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... அரசு நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டின் மக்கள் தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 6,24,05,679 ஆகும். தற்போதுள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8,683 துணை சுகாதார நிலையங்களும், 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அமைக்கப்பட்டவையாகும். எனவே, 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்திற்கு கூடுதலாக 178 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 900 துணை சுகாதார நிலையங்களும் தேவைப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தேசிய ஊரக நலத்திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு கூடுதலாக 178 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 300 துணை சுகாதார நிலையங்களும் அமைத்திட மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மலைப்பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மக்கள் தொகை 20 ஆயிரம் என்பதனை 5,000, 10,000 என குறைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	51
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	199/2005
4.	பொருள்	:	மலைப்பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மக்கள் தொகை 20 ஆயிரம் என்பதனை 5,000, 10,000 என குறைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல் குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண் துணை வினா	:	41732
	நாள்	:	17.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. போளூர் வரதன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	1. மலைப்பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க 20,000 ஜனத்தொகை இருக்க வேண்டுமென்ற மைய அரசின் நெறிமுறைகளைத் தளர்த்தி 5,000, 10,000 ஜனத்தொகை உள்ள பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து மைய அரசுடன் பரிசீலிக்கப்படும். 2. இருந்தாலும் தற்சமயம் மத்திய அரசின் இலக்கின்படி ஒவ்வொரு 30,000 மக்கள் தொகைக்கு சமவெளிப்பகுதியிலும், ஒவ்வொரு 20,000 மக்கள் தொகைக்கு மலைப்பகுதியிலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரம் சாராத மக்கள்

தொகையை கணக்கிட்டு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 178 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விழுப்புரம், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நோய்களைக் கண்டறியும் மையங்கள் அமைத்தல் குறித்து.

1.	வரிசை எண்.	:	52
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	221/2005
4.	பொருள்	:	விழுப்புரம், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நோய்களைக் கண்டறியும் மையங்கள் அமைத்தல் குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... கட்டடங்களைக் கட்டி உபகரணங்களை வாங்கி, அதற்கான மருத்துவர்களை கூடிய விரைவிலே அரசு நியமிக்கும்
8.	துறையின் பதில்	:	விழுப்புரம், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, திருப்பூர், திருவண்ணாமலை, இராமநாதபுரம் ஆகிய 7 மாவட்டங்களில் நோய்களைக் கண்டறியும் மையங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டு மருத்துவக் கருவிகள் மற்றும் சாதனங்கள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் பெறப்பட்டு தேவையான பணியிடங்கள் உருவாக்கப்பட்டு மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககம் இடையே கணினிமயமாக்கப்பட்ட கட்டமைப்பு உருவாக்குதல் குறித்து.

1.	வரிசை எண்.	:	53
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	223/2005
4.	பொருள்	:	மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககம் இடையே கணினிமயமாக்கப்பட்ட கட்டமைப்பு உருவாக்குதல் குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... ரூ.50.00 இலட்சம் மொத்தச் செலவிலே உருவாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	பகுதி–2 திட்டம் 2005–2006–ல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்வி இயக்ககம் இடையே கணினிமயமாக்கப்பட்ட கட்டமைப்பு உருவாக்க அரசாணை எண்(நிலை) 169, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 04.08.2005–ல், ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டது. மேற்கண்ட தொகையிலிருந்து ரூ.28,05,908/–க்கு மருத்துவக் கல்வி இயக்கத்திற்கு 10 கணினிகளும் மற்றும் இவ்வியக்ககத்தின் கீழ் இயங்கும் 23 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 23 கணினிகளும் எல்காட் மூலமாக வாங்கி வழங்கப்பட்டு விட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

எடப்பாடி, தாராபுரம், கடலாடி, கொடுமுடி, அறந்தாங்கி ஆகிய வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் புறநோயாளி பிரிவு கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	54
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	231/2005
4.	பொருள்	:	எடப்பாடி, தாராபுரம், கடலாடி, கொடுமுடி, அறந்தாங்கி ஆகிய வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் புறநோயாளிப் பிரிவு கட்டுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகளின் விவாதத்தின் மீது மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... மொத்தம் 1.5 கோடி செலவிலே புறநோயாளி பிரிவு கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின், 2005–06 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் எடப்பாடி, தாராபுரம், கடலாடி, கொடுமுடி, அறந்தாங்கி ஆகிய ஐந்து அரசினர் வட்ட தலைமையிட மருத்துவமனைகளுக்கு புறநோயாளி பிரிவு கட்டிடம் கட்ட ரூ.150 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு தாராபுரம், கடலாடி, கொடுமுடி அரசு மருத்துவமனைகளில் கட்டிடப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. எடப்பாடி மற்றும் அறந்தாங்கி வட்ட அரசு மருத்துவமனைகளின் புறநோயாளிகள் பிரிவு கட்டிடப்பணிகள் முடிவுற்று தற்போது புதிய கட்டிடத்தில் செயல்பட்டுவருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியிலும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டியிலுள்ள இரு அரசினர் மருத்துவமனைகளிலும் மகப்பேறு பிரிவு கட்டடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	55
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	232/2005
4.	பொருள்	:	நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியிலும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டியிலுள்ள இரு அரசினர் மருத்துவமனைகளிலும் மகப்பேறு பிரிவு கட்டடம் கட்டுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... இரு அரசினர் மருத்துவமனைகளிலே மொத்தம் ரூ.42 இலட்சம் செலவில் மகப்பேறு பிரிவு கட்டடம் கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின், 2005–06 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியிலும் மதுரை மாவட்டம் வாடிப்பட்டியிலும் உள்ள இரு அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு பிரிவு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.42 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு மேற்கண்ட இரு மருத்துவமனைகளிலும் 12 படுக்கை வசதி கொண்ட மகப்பேறு பிரிவுகள் கட்டப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தரங்கம்பாடி, திருச்செங்கோடு வட்ட தலைமையிட அரசினர் மருத்துவமனைகளில் சீர்வளி வசதியுடன் அறுவை சிகிச்சை கூடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	56
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	234/2005
4.	பொருள்	:	தரங்கம்பாடி, திருச்செங்கோடு வட்ட தலைமையிட அரசினர் மருத்துவமனைகளில் சீர்வளி வசதியுடன் அறுவை சிகிச்சை கூடம் கட்டுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... அறுவை சிகிச்சைக்கூடம் கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின், 2005–06 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி மற்றும் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு ஆகிய இரு அரசினர் மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் கட்ட ரூ.50.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மேற்குறிப்பிட்டுள்ள மருத்துவமனைகளில் குளிர்சாதன வசதியுடன் கூடிய அறுவை அரங்கம் அரசு ஆணைப்படி கட்டப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தாம்பரம் மற்றும் மானாமதுரை அரசினர் வட்ட மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	57
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	235/2005
4.	பொருள்	:	தாம்பரம் மற்றும் மானாமதுரை அரசினர் வட்ட மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
			... 10 படுக்கைகள் கொண்ட பிரிவுடன் கூடிய கட்டடம் கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின், 2005–06 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் தாம்பரம் மற்றும் மானமதுரை அரசினர் வட்ட மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு செயல்படுத்த ரூ.190.66 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் அரசினர் மருத்துவமனை விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகிறது. சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசினர் மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர கால சிகிச்சைப் பிரிவு கட்டி முடிக்கப்பட்டு தற்போது சிறப்பாக செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

துவரங்குறிச்சி மற்றும் வள்ளியூர் அரசினர் வட்ட சாரா இரு மருத்துவமனைகளில் 12 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டி அடிப்படை வசதிகள் மேம்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	58
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	239/2005
4.	பொருள்	:	துவரங்குறிச்சி மற்றும் வள்ளியூர் அரசினர் வட்ட சாரா இரு மருத்துவமனைகளில் 12 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டி அடிப்படை வசதிகள் மேம்படுத்துவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	,
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... 12 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டுவதன் மூலமாக அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின், 2005–06 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் அரசினர் வட்ட சாரா இரு மருத்துவமனைகளுக்கும் 12 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டிடம் கட்டுவதற்கு ரூ.30.60 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இரு அரசினர் மருத்துவமனைகளில் 12 படுக்கை கொண்ட பிரிவு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அடிப்படை வசதிகளின் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மாத்தூர் மற்றும் வாடிப்பட்டி வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மின் உற்பத்தி இயந்திரங்களுக்காக கட்டடங்கள் கட்டி அடிப்படை வசதிகள் மேம்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	59
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	241 / 2005
4.	பொருள்	:	மாத்தூர் மற்றும் வாடிப்பட்டி வட்டம் சாரா இரு மருத்துவமனைகளில் மின் உற்பத்தி இயந்திரங்களுக்காக கட்டடங்கள் கட்டி அடிப்படை வசதிகள் மேம்படுத்துவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின், 2005–06 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் மாத்தூர் மற்றும் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அரசினர் வட்டம் சாரா இரு மருத்துவமனைகளுக்கும் அடிப்படை வசதிகள் மேம்படுத்த ரூ.40 KVA திறன் கொண்ட மின்னாக்கி வழங்க ரூ.25 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இரு மருத்துவமனைகளுக்கு மின் ஆக்கிகள் புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இரு துளை லேப்ரோஸ்கோப் கருவிகள் வாங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	60
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	244 / 2005
4.	பொருள்	:	அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இரு துளை லேப்ரோஸ்கோப் கருவிகள் வாங்குவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
			... மொத்தம் ரூ.50 இலட்சம் செலவிலே வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை (நிலை) எண்.124 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 08.06.2005–ன்படி திட்ட இரண்டின்படி (Part II Scheme) ரூ.50 இலட்சத்திற்கு 19 இருதுளை லேப்ராஸ்கோப் கருவிகள் வாங்கப்பட்டு மாவட்ட அரசினர் மருத்துவமனை கல்லூரிகளுக்கு கீழ்க்கண்ட மாவட்ட குடும்ப நல அலுவலகம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

1.	கடலூர்	1
2.	கோயம்புத்தூர்	1
3.	புதுக்கோட்டை	1
4.	மதுரை	1
5.	திருநெல்வேலி	1
6.	இராமநாதபுரம்	1
7.	நாகர்கோவில்	1
8.	திண்டுக்கல்	1
9.	கரூர்	1
10.	ஈரோடு	1
11.	திருச்சி அண்ணல் காந்தி மருத்துவமனை, திருச்சி	1
12.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்	1
13.	தூத்துக்குடி	1
14.	கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை–10	1
15.	செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு	1
16.	தாய்சேய் நல மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை–8	1
17.	அரசு ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, சென்னை–13	1
18.	அரசினர் கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, சென்னை–5	1
19.	சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்	1
	மொத்தம்	19

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்க வளாகத்தில் மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்காக மருத்துவப் பொருள் அறை கட்டப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	61
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	245 / 2005
4.	பொருள்	:	மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்க வளாகத்தில் மருந்து கட்டுப்பாடு இயக்ககத்திற்காக மருத்துவப் பொருள் அறை கட்டப்படுவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	–
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... மொத்தம் ரூ.28.00 இலட்சம் செலவிலே கட்டடம் மற்றும் மாநாட்டுக் கட்டடம், நூலகக் கட்டடம் மற்றும் பதிவேட்டு அறை, மின்தூக்கி வசதியுடன் மருத்துவப் பொருள் அறை கட்டப்படும்.
8.	துறையின் பதில்	:	ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில், புதிய கட்டிடம், தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டி முடிக்கப்பட்டு, மருந்து கட்டுப்பாடு நிர்வாகத் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் வசதியைத் தரம் உயர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	62
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	246 / 2005
4.	பொருள்	:	இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் வசதியைத் தரம் உயர்த்துவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... ரூ.2.208 கோடி மொத்தச் செலவில் தரம் உயர்த்தப்படும்.
8.	துறையின் பதில்	:	மத்திய அரசு நிதி உதவியுடன் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் வசதிகள் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் பாளையங்கோட்டை, அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம், அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள் மத்திய அரசின் கல்லூரிகள் தரம் உயர்த்தும் திட்ட நிதி உதவியுடன், தலா ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மாவட்ட பெரிய மருத்துவமனைகளுக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதி செய்து தருவது குறித்து.

1.	வரிசை எண்.	:	63
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	248 / 2005
4.	பொருள்	:	மாவட்ட பெரிய மருத்துவமனைகளுக்கு எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வசதி செய்து தருவது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம்	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.கே.சி. கருணாகரன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... வருகின்ற நிதி ஆண்டில் கண்டிப்பாக இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நடப்பாண்டில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வேலூர், திருநெல்வேலி, கோயம்பத்தூர், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்பட்டுள்ளது. இவைகளின் செயல்பாட்டிற்கு ஏற்ப மாவட்ட பெரிய மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன் வழங்குவதற்கு வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

பாம்புக்கடிக்கான மருந்தினை தாராளமாக கிடைப்பதற்கு வழிவகை செய்வது குறித்து.

1.	வரிசை எண்.	:	64
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	249 / 2005 மற்றும் 370 / 2007
4.	பொருள்	:	பாம்புக்கடிக்கான மருந்தினை தாராளமாக கிடைப்பதற்கு வழிவகை செய்வது குறித்து.
5.	2005–2006 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	21.03.2005
6.	உறுப்பினர் பெயர்	:	திரு. துரைமுருகன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
			... கண்டிப்பாக அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்புக்கடி மருந்துகள் தற்போது போதுமான அளவு கையிருப்பில் உள்ளன.
			அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் பெரிய வட்ட மருத்துவமனைகளிலும் 24 மணிநேரமும் இயங்கும் நஞ்சு முறிவு சிகிச்சை மையங்கள் நடப்பாண்டிலேயே துவக்கப்பட உள்ளது. இம்மையங்களில் பாம்புக்கடி உள்ளிட்ட அனைத்து வகை நஞ்சுகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் நவீன முறையில் உடனடி சிகிச்சை வழங்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கணவனுக்கு மனைவி தனது சிறுநீரகத்தைத் தானமாக கொடுக்க உரிய விதியைத் தளர்த்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	65
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	424 / 2005
4.	பொருள்	:	கணவனுக்கு மனைவி தனது சிறுநீரகத்தைத் தானமாக கொடுக்க உரிய விதியைத் தளர்த்துவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	50730
	துணை வினா		
	நாள்	:	11.04.2005
6.	உறுப்பினர் பெயர்	:	டாக்டர் சி. விஜயபாஸ்கர்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய்சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	கணவன் அல்லது மனைவி சிறுநீரகத்தை தங்களுக்குள் தானம் செய்ய முன் வரும்போது, அவர்களுடைய உறவை உறுதி செய்து அதற்கு அனுமதி அளிக்கலாம் என்று அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க 30,000 ஜனத்தொகை இருக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்தி 20,000, 15,000 ஜனத்தொகை உள்ள பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	66
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	63 / 2006
4.	பொருள்	:	ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்க 30,000 ஜனத்தொகை இருக்க வேண்டுமென்ற விதியைத் தளர்த்தி 20,000, 15,000 ஜனத்தொகை உள்ள பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்.	:	59128
	துணை வினா		
	நாள்	:	21.01.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.பி.ஆர். சுந்தரம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... அரசு நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	தற்சமயம் மத்திய அரசின் இலக்கின்படி ஒவ்வொரு 30,000 மக்கள் தொகைக்கு சமவெளிப்பகுதியிலும், ஒவ்வொரு 20,000 மக்கள் தொகைக்கு மலைப்பகுதியிலும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது 1417 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரம் சாரதா மக்கள் தொகையை கணக்கிட்டு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் கூடுதலாக 178 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டவுடன் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். 30,000 மக்கள் தொகைக்கு என்ற அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்ட பின் 20,000 மற்றும் 15,000 ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து மைய அரசுக்கு பரிந்துரை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

ஊரகப் பகுதி, ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான மருத்துவர்கள் நியமிக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	67
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	171 / 2006
4.	பொருள்	:	ஊரகப் பகுதி, ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான மருத்துவர்கள் நியமிக்கப்படுவது குறித்து.
5.	ஆளுநர் பேரூரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதிலுரை	:	
	நாள்	:	30.05.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் ... ஆரம்ப சுகாதார நிலையங்கள் அத்தனையிலும் தேவையான மருத்துவர்கள் நியமிக்கப்பட ஆவன செய்யப்படும்.
8.	துறையின் பதில்	:	கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு மருத்துவச் சேவை தங்கு தடையின்றி கிடைக்கும் பொருட்டு காலியாகவுள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களை வேலைவாய்ப்பகம் மூலமாக நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அனைத்து மருத்துவ அலுவலர் காலி பணியிடங்களும் கூடிய விரைவில் நிரப்பப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கிராமப்புறங்களில் செவிலியர் விடுதிக் கட்டிடங்களை ஊருக்குள்ளே கட்டுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	68
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	460 / 2006
4.	பொருள்	:	கிராமப்புறங்களில் செவிலியர் விடுதிக் கட்டிடங்களை ஊருக்குள்ளே கட்டுவது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண்	:	262
	துணை வினா		
	நாள்	:	12.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.கி.ஆறுமுகம்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ... அது சம்பந்தமாக அரசு ஆய்வு செய்து சரியான முடிவெடுக்கும்
8.	துறையின் பதில்	:	தமிழகத்தில் கிராம புறங்களில் இருக்கிற செவிலியர் விடுதிகள்/கட்டிடங்கள் ஊருக்குள்ளே கட்டுவதற்கு தகுதியான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன. நிலங்கள் கிடைத்தபின் அந்த இடங்களில் விடுதிகள்/கட்டிடங்கள் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதிகள், பராமரிப்புப் பணிகள் அதிகப்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	69
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	543 / 2006 & 690 / 2007
4.	பொருள்	:	மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளின் உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துவது மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதிகள், பராமரிப்புப் பணிகள் அதிகப்படுத்துவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர், ... ஒரு சிறப்பு திட்டம் ஆய்வில் உள்ளது.
8.	துறையின் பதில்	:	ரூ.21 கோடி செலவில் மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு கீழ்கண்ட மருத்துவக் கல்லூரிகளின் திட்டம் மற்றும் வரைபடம் எதிர் நோக்கப்படுகிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.3.00 கோடி செலவில் கருத்துரு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. கீழ்கண்ட விவரப்படி இதர மருத்துவக் கல்லூரிகளுக்கு கருத்துரு எதிர் நோக்கப்படுகிறது.

		கோடி
1.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி	2.30
2.	பல் மருத்துவக் கல்லூரி சென்னை	2.40
3.	செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி	2.60
4.	திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி	2.60
5.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி	2.50
6.	திருச்சி மருத்துவக் கல்லூரி	3.00
7.	மதுரை மருத்துவக் கல்லூரி	2.60

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் இருதய அறுவை சிகிச்சை எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	70
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	560 / 2006
4.	பொருள்	:	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் இருதய அறுவை சிகிச்சை எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்
8.	துறையின் பதில்	:	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் இருதய அறுவை சிகிச்சை எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு குறைவாக உள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு தனியார் மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இத்திட்டம் 21.11.2007-ல் மாண்புமிகு தமிழக முதல்வரால் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தாய்சேய் நலப் பிரிவுகளை தரம் உயர்த்தி நவீனப்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	71
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	562 / 2006
4.	பொருள்	:	அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தாய்சேய் நலப் பிரிவுகளை தரம் உயர்த்தி நவீனப்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... ரூ.7 கோடி வழங்கப்படும்
8.	துறையின் பதில்	:	13.12.2006 அன்று நடைபெற்ற மாநில நலவாழ்வு சங்க செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள 14 அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு ரூ.50 இலட்சம் வீதம் ரூ.7.00 கோடி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உரிய நடவடிக்கைகள் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனைகளிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்தில் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும் சிறுநீரக டயாலிஸிஸ் கருவியை உடனடியாக வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	72
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	564 / 2006
4.	பொருள்	:	தமிழகத்தில் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும் சிறுநீரக டயாலிஸிஸ் கருவியை உடனடியாக வழங்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... உடனடியாக வழங்கப்படும்
8.	துறையின் பதில்	:	6 படுக்கைகள் கொண்ட இரத்த சுத்திகரிப்பு நிலையம் 29 மாவட்ட மருத்துவமனைகளில் அமைப்பதற்கான கட்டிடப் பணிகள் முடிவடைந்தவுடன் தமிழ்நாடு மருத்துவசேவைக் கழகத்தின் மூலம் கருவிகள் வாங்கி நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அரைமணி நேர பயணத்தில் எந்த ஒரு கிராமத்திலிருந்தும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை பெறும் வகையில் பேறுகால மற்றும் இளஞ்சிசு அவசர சிகிச்சை மையங்கள் அமைப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	73
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	565 / 2006
4.	பொருள்	:	அரைமணி நேர பயணத்தில் எந்த ஒரு கிராமத்திலிருந்தும் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகள் அவசர சிகிச்சை பெறும் வகையில் பேறுகால மற்றும் இளஞ்சிசு அவசர சிகிச்சை மையங்கள் அமைப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...தேர்ந்தெடுக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசாணை (2டி) எண்.21 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை நாள்:24/02/2006–இல், அவசர சிகிச்சை பெறும் வகையில் பேறு காலம் மற்றும் இளஞ்சிசு மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் அமைக்க 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தெரிவு செய்து, அதில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான உபகரணங்கள் வாங்க ரூ.127.80 இலட்சம், லேப் ரீஏஜென்ட் வாங்க ரூ.5.78 இலட்சம் மற்றும் மருந்துகள் வாங்க ரூ.26.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவைகளை வாங்கி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கிட ஏதுவாக மேற்குறித்த தொகை தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள சி.டி.ஸ்கேன் மையங்கள் 24 மணி நேரம் செயல்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	74
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	580 / 2006
4.	பொருள்	:	தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் உள்ள சி.டி.ஸ்கேன் மையங்கள் 24 மணி நேரம் செயல்படுவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...24 மணி நேரமும் செயல்படும்.
8.	துறையின் பதில்	:	சென்னை பொது மருத்துவமனை, சென்னை ஸ்டேன்லி மருத்துவமனை, மதுரை இராசாசி மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்பத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் 24 மணி நேர சி.டி.ஸ்கேன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய மருத்துவமனைகளில் தேவைக்கேற்ப படிப்படியாக நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

கிராமப்புற ஏழை மக்கள் சி.டி.ஸ்கேன் வசதியை எளிதில் பெறும் வகையில் 10 அரசு மருத்துவமனைகளுக்கும், 10 புது மருத்துவமனைகளுக்கும் இந்த ஆண்டிலேயே சி.டி.ஸ்கேன் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	75
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	581 / 2006
4.	பொருள்	:	கிராமப்புற ஏழை மக்கள் சி.டி.ஸ்கேன் வசதியை எளிதில் பெறும் வகையில் 10 அரசு மருத்துவமனைகளுக்கும், 10 புது மருத்துவமனைகளுக்கும் இந்த ஆண்டிலேயே சி.டி.ஸ்கேன் வழங்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			...கருவிகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்துக்கு ஒரு சி.டி.ஸ்கேன் என்ற அளவில் மாநிலத்தில் மொத்தம் 40 சி.டி.ஸ்கேன் மையங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு வேலூர் மாவட்டம் திருப்பத்தூர், திண்டுக்கல் மாவட்டம், பழனி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் சி.டி.ஸ்கேன் மையம் நிறுவ அரசால் ஆணையிடப்பட்டு அதற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளது. இந்த மூன்று இடங்களிலும் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் சி.டி.ஸ்கேன் மையங்கள் நிறுவப்பட்டு செயல்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

லேபராஸ்கோப்பி குடும்பநல அறுவை சிகிச்சை எண்ணிக்கை மற்றும் தரத்தை உயர்த்தும் வகையில் அரசு மருத்துவமனைகளுக்கு 66 நவீன லேபராஸ்கோப்பி கருவிகள் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	76
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	589 / 2006
4.	பொருள்	:	லேபராஸ்கோப்பி குடும்பநல அறுவை சிகிச்சை எண்ணிக்கை மற்றும் தரத்தை உயர்த்தும் வகையில் அரசு மருத்துவமனைகளுக்கு 66 நவீன லேபராஸ்கோப்பி கருவிகள் வழங்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ரூ.1.71 கோடி செலவில் வாங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அரசு மருத்துவமனைகளில் குடும்பநல அறுவை சிகிச்சை எண்ணிக்கை மற்றும் தரத்தை உயர்த்தும் வகையில் ரூ.1.71 கோடி செலவில் 66 இரு துவார லேப்ராஸ்கோப் (Double Puncture Laprascopes) கருவிகளை தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் குடும்பநல இயக்குநர் வாங்குவதற்கு ஒப்பளிப்பு செய்து அரசாணை (டி) எண்.856, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்: 25.08.2006–ல் ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி கருவிகள் வாங்கி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

சுனாமியால் பாதிக்கப்பட்ட 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிநவீன பச்சிளங்குழந்தை பராமரிப்புக் கருவிகள் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	77
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	591 / 2006
4.	பொருள்	:	சுனாமியால் பாதிக்கப்பட்ட 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிநவீன பச்சிளங்குழந்தை பராமரிப்புக் கருவிகள் வழங்குவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			... ரூ.1.15 கோடி செலவில் UNICEF நிறுவன உதவியுடன் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	சுனாமியால் பாதிக்கப்பட்ட 161 ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறைந்த பட்சம் 100 பிரசவங்களை ஒவ்வொரு வருடமும் நடத்தும், 80 ஆரம்ப சுகாதார நிலையங்களை தேர்ந்தெடுத்து அவற்றுக்கு கீழ்கண்ட கருவிகள் யூனிசப் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

வ.எ.	கருவியின் பெயர்	எண்ணிக்கை	மொத்த மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்)
1	வெப்ப கதிர் வீசும் கருவி (Radiant Warmer)	92	19.32
2	நிழற்பட நோய் தீர்வியல் அலகு (Photoe therapy Unit)	86	42.17
3	உறிஞ்சக் கூடிய விசைக்குழாய் (Suction Pump)	80	08/16
4	வெளியேற்ற கூடிய கருவிக் கலப்பெட்டி (Resucitation Kit)	86	51.15
	மொத்த மதிப்பீடு		120.80

தற்பொழுது வழங்கப்பட்ட 80 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள கருவிகளின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு, மீதம் உள்ள 81 அரசினர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், யூனிசப் மூலம் மேற்படி கருவிகள் வழங்கப்பட உள்ளது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

TRUTH ALONE TRIUMPHS

அதிநவீன உயிர் காக்கும் வசதிகளுடன் கூடிய 6 ஆம்புலன்ஸ் வாகனங்கள் நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு UNICEF மற்றும் ஐக்கிய நாடுகள் குடும்பநல அமைப்பு ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	78
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	592 / 2006
4.	பொருள்	:	அதிநவீன உயிர் காக்கும் வசதிகளுடன் கூடிய 6 ஆம்புலன்ஸ் வாகனங்கள் நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு UNICEF மற்றும் ஐக்கிய நாடுகள் குடும்பநல அமைப்பு ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் வழங்கப்படுவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ரூ.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	UNICEF உதவியுடன் வழங்கப்பட்ட 6 ஆம்புலன்ஸ்களுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் சிறப்பு ஆம்புலன்ஸ் சேவை செயல்படுத்த 24 செவிலியர்களையும் 24 ஓட்டுநர்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் தருமபுரி அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	79
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	612 / 2006
4.	பொருள்	:	எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் தருமபுரி அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ஏற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் தருமபுரி அரசு மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	80
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	613 / 2006
4.	பொருள்	:	எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.
5.	2006-2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... ஏற்படுத்தப்படும்
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விருதுநகர் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விழுப்புரம் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	81
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	614 / 2006
4.	பொருள்	:	எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விழுப்புரம் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... ஏற்படுத்தப்படும்
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விழுப்புரம் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் கரூர் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	82
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	615 / 2006
4.	பொருள்	:	எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் கரூர் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ஏற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் கரூர் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டு தற்போது இயங்கி வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	83
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	616 / 2006
4.	பொருள்	:	எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் ஏற்படுத்துவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ஏற்படுத்தப்படும்.
8.	துறையின் பதில்	:	நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க கூட்டு மருந்து சிகிச்சை மையம் விரைவில் நிறுவப்படும். குழுத் தலைவர்: இந்த உறுதிமொழி நிறைவேற்றப்பட்டதாகக் கருதி கைவிடப்படுகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

பெண்களின் வேலைவாய்ப்பைக் கருத்திற்கொண்டு ஊரகப் பகுதிகளில் புதிய செவிலியர் கல்லூரிகளை தொடங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	84
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	619 / 2006
4.	பொருள்	:	பெண்களின் வேலைவாய்ப்பைக் கருத்திற்கொண்டு ஊரகப் பகுதிகளில் புதிய செவிலியர் கல்லூரிகளை தொடங்குவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...நடவடிக்கை எடுக்கும்.
8.	துறையின் பதில்	:	இம்மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் தனியார் சுயநிதி நிறுவனங்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், மருத்துவம் சார்ந்த செவிலியர் கல்லூரிகளை தொடங்க அனுமதி வழங்குவதற்கான கொள்கை முடிவுகளை மேற்கொண்டு அரசாணை (நிலை) எண்.118, சுகாதாரம், நாள்: 06.07.2006–ல் அரசு உத்தரவிட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் செவிலியர் கல்லூரிகள் தொடங்குவதால் செவிலியர் பயிற்சி முடித்த பெண்களுக்கு உடனடியாக உள்நாடு/வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு அதிகளவில் கிடைக்கும். இதுவரை சுமார் 80 செவிலியர் கல்லூரிகளை ஊரகப் பகுதிகளில் தொடங்குவதற்கு தனியார் சுயநிதி நிறுவனங்கள் தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

நீரழிவு, இதய நோய்கள் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சி அளிக்கவும் நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சைக்கு வருவதை ஊக்குவிப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	85
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	624 / 2006
4.	பொருள்	:	நீரழிவு, இதய நோய்கள் மற்றும் உயர் இரத்த அழுத்த நோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சி அளிக்கவும் நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சைக்கு வருவதை ஊக்குவிப்பது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ரூ.15.11 கோடி தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நீரழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோய்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சி அளிக்கவும் நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சைக்கு வருவதை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.15.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு சென்னையில் ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது. மேலும், 14.11.2006 அன்று மாவட்ட அளவில் நீரிழிவு நோய் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகளும், 14.11.2006 முதல் 21.11.2006 வரை அனைத்து மாவட்டங்களிலும் சமுதாயம் சார்ந்த சுகாதார மேம்பாட்டு நடவடிக்கை திரளணி (RALLY) மற்றும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

நீரிழிவு, உயர் அழுத்தம் மற்றும் இதய நோய்களைக் கட்டுப்படுத்த விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முன்னோடித் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 06.07.2007 அன்று இவ்விரு மாவட்டங்களிலும் துவங்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : படித்துப் பதிவு செய்யப்பட்டது



கண் சிகிச்சை உபகரணங்கள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் இதர அரசு மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	86
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	635 / 2006
4.	பொருள்	:	கண் சிகிச்சை உபகரணங்கள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் இதர அரசு மருத்துவமனைகளுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ரூ.1.98 கோடி செலவில் நடப்பாண்டில் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழ்நாடு மாநில பார்வையிழப்பு தடுப்பு சங்கத்தின் மூலம் ரூ.201 இலட்சத்திற்கு கண் சிகிச்சை உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

நீரழிவு நோயின் காரணமாக ஏற்படும் கண் பார்வை கோளாறுகளுக்கு லேசர் சிகிச்சை அளிக்கும் வசதிகள் பரவலாக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	87
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	636 / 2006
4.	பொருள்	:	நீரழிவு நோயின் காரணமாக ஏற்படும் கண் பார்வை கோளாறுகளுக்கு லேசர் சிகிச்சை அளிக்கும் வசதிகள் பரவலாக்கப்படுவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...சிகிச்சை அளிக்கும் வசதிகள் பரவலாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	நீரழிவு நோயின் காரணமாக ஏற்படும் கண்பார்வை கோளாறுகளுக்கு லேசர் சிகிச்சை அளிக்கும் வசதிகள் தற்போது சென்னை எழும்பூரிலுள்ள மண்டல கண் மருத்துவமனையில் மட்டுமே உள்ளது. இவ்வசதியை மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோவை ஆகிய மாவட்டங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர் இவ்வசதி அனைத்து தலைமை மருத்துவமனைகளுக்கும் படிப்படியாக பரவலாக்கப்பட உள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

மஞ்சள் காமாலை நோயை தடுப்பதற்காக எல்லா குழந்தைகளுக்கும் Hepatitis-B தடுப்பூசி போடுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	88
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	715 / 2007
4.	பொருள்	:	மஞ்சள் காமாலை நோயை தடுப்பதற்காக எல்லா குழந்தைகளுக்கும் Hepatitis-B தடுப்பூசி போடுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ...ரூ.7.2 கோடி செலவிலே இந்த ஆண்டிலே அந்த மஞ்சள் காமாலை தடுப்பூசி போடப்படும்.
8.	துறையின் பதில்	:	Hepatitis-B மருந்து மற்றும் ஊசிக் குழல்கள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாட்டில் துவக்கப்படுவதற்கான ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து வரப்பெற்றவுடன் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

29 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு பகுதிக்கு தேவைப்படும் அத்தியாவசியமான கருவிகள் வழங்குவது குறித்து.

1.	வரிசை எண்.	:	89
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	725 / 2007
4.	பொருள்	:	29 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு பகுதிக்கு தேவைப்படும் அத்தியாவசியமான கருவிகள் வழங்குவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... ஒவ்வொரு மாவட்டத்திற்கு தலா ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.5.8 கோடி செலவில் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	29 மாவட்ட தலைமை மருத்துமனைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு பகுதிக்கு தேவைப்படும் அத்தியவசியமான கருவிகள் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு இக்கருவிகள் உபயோகத்தில் உள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

துணை சுகாதார நிலையங்களுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	90
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	727 / 2007
4.	பொருள்	:	துணை சுகாதார நிலையங்களுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் வழங்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			... கடந்த நிதியாண்டில் 8683 துணை சுகாதார நிலையங்களுக்கும், எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் ரூ.2.6 கோடி செலவில் வழங்கப்பட உள்ளது. நடப்பு நிதியாண்டில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கருவிகளை தொற்றுநீக்கம் செய்யவும் பிரசவித்த தாய்மார்களுக்கு வெந்நீர் வழங்கிடவும் ரூ.42.63 இலட்சம் செலவில் எரிவாயு மற்றும் அடுப்புகள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	2006–2007 ஆம் நிதியாண்டில் 8683 துணை சுகாதார நிலையங்களுக்கும் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள் ரூ.2.6 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

தமிழகத்தில் 13 இடங்களில் டெங்கு, மூளை காய்ச்சல் மற்றும் சிக்கன்குனியா ஆய்வக சோதனை மையங்கள் அமைக்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	91
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	732 / 2007
4.	பொருள்	:	தமிழகத்தில் 13 இடங்களில் டெங்கு, மூளை காய்ச்சல் மற்றும் சிக்கன்குனியா ஆய்வக சோதனை மையங்கள் அமைக்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் ஐவிசி, ஒசூர் ஆகிய இடங்களில் டெங்கு, மூளைக் காய்ச்சல் மற்றும் சிக்குன் குனியா ஆய்வக சோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. (அரசாணை (நிலை) எண்.311 (சுகாதாரம், நாள்: 30.08.2007)
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய வாகனங்கள் மற்றும் நடமாடும் தகவல் கல்வி மற்றும் தொடர்பு வாகனங்கள் வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	92
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	735 / 2007
4.	பொருள்	:	நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய வாகனங்கள் மற்றும் நடமாடும் தகவல் கல்வி மற்றும் தொடர்பு வாகனங்கள் வழங்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			... ரூ.30 இலட்சம் செலவில் 10 நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மைய வாகனங்களும் நகர்புற குடிசைப் பகுதிகளில் எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் 2 நடமாடும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு வாகனங்கள் வழங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் சேவைகளுக்கு இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மூலம் 8 நடமாடும் ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் பரிசோதனை மைய வாகனங்கள், இரண்டு நடமாடும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு வாகனங்கள் 16.11.2007 அன்று 10 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினி வழங்கப்படுவது குறித்து.

1.	வரிசை எண்.	:	93
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	745 / 2007
4.	பொருள்	:	அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினி வழங்கப்படுவது குறித்து.
5.	2007–2008 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	23.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			... கணினி வழங்கப்பட்டு கணினி மயமாக்கப்படும் அனைத்து கணினிகளும் அகண்டவலை தளத்தின் (Bradband Connectivity)வாயிலாக இணைக்கப்படும். இதன் மூலம் தகவல் பரிமாற்றம் எளிதாக்கப்படும்.
8.	துறையின் பதில்	:	அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் (385) கணினிகள் ரூ.1.54 கோடி செலவில் தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. இணைய தள இணைப்பிற்காக ஒவ்வொரு வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.500/– நிதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 231 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள கணினிகளுக்கு அகண்ட வலை தள வசதி இணைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள 154 வட்டார சுகாதார நிலையங்களில் உள்ள கணினிகளுக்கும் தகவல் தொடர்பு துறை மூலமாக பதிவு மூப்பு அடிப்படையில் அகண்ட வலை தள வசதி இணைப்பு பெறுவதற்கு நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருகின்றன. அகண்ட வலை தள வசதி (Bradband Connectivity) இல்லாத இடங்களில் சாதாரண வலை தள இணைப்பு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் கருத்து : நிறைவேற்றப்பட்டது

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழக அரசு மருத்துவமனைகளில் உதகை HPF தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் X-Ray படச்சுருள்களை பயன்படுத்துவது குறித்து.

1.	வரிசை எண்.	:	94
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	823 / 2007
4.	பொருள்	:	தமிழக அரசு மருத்துவமனைகளில் உதகை HPF தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் X-Ray படச்சுருள்களை பயன்படுத்துவது குறித்து.
5.	உடுக்குறியிடாத வினா எண்	:	13466
	நாள்	:	25.04.2007
6.	உறுப்பினர் பெயர்	:	திரு.போ. கோபாலன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			... இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனமும் DGS&D Rate Contract–படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்தால் அந்நிறுவனத்திடமிருந்து எக்ஸ்ரே படச்சுருள் வாங்கப்படும்.
8.	துறையின் பதில்	:	தற்போதுள்ள வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்கீழ் (Transparency in Tender Act) இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்திற்கு உதவி செய்ய இயலவில்லை. இந்நிறுவனம் ஊட்டியில் உள்ளதால், நாட்டில் வரி விலக்கு பகுதிகளில் அமைந்துள்ள நிறுவனங்களோடு இந்நிறுவனத்தால் போட்டி போட இயலவில்லை. எனவே, இந்நிறுவனத்திற்கு உதவி செய்யும் பொருட்டு, மேற்கண்ட சட்டத்திற்கு தகுந்த திருத்தம் செய்ய பரிசீலிக்குமாறு நிதித்துறையை இத்துறை கோரியது. நிதித்துறையின் ஆய்விற்கு இக்கோப்பு அத்துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	படித்துப் பதிவு செய்யப்பட்டது

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு சுகாதார ஊழியர் தங்கி இருக்க குடியிருப்பு கட்டிக் கொடுப்பது குறித்து.

1.	வரிசை எண்.	:	95
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	1106 / 2007
4.	பொருள்	:	அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு சுகாதார ஊழியர் தங்கி இருக்க குடியிருப்பு கட்டிக் கொடுப்பது குறித்து.
5.	உடுக்குறியிட்ட வினா எண். துணை வினா	:	10498
	நாள்	:	10.05.2007
6.	உறுப்பினர் பெயர்	:	டாக்டர் க. நெடுஞ்செழியன்
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ... கிராம மக்களுக்கு மருத்துவர்கள், செவிலியர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை, இருப்பதை சரிசெய்து முதலிலே கொடுத்துவிட்டு பிறகு புதிதாக அந்த பணிகளை செய்ய இருக்கிறோம்.
8.	துறையின் பதில்	:	20 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய குடியிருப்புகள் நபார்டு வங்கி நிதி உதவியின் கீழ் கட்ட கருத்துரு அனுப்பப்பட்டு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. ஏற்கனவே உள்ள குடியிருப்புகளை சரி செய்து தர பழுதுபார்ப்பு பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
9.	ஆய்வு செய்யப்பட்ட நாள்	:	27.11.2007
10.	குழுவின் கருத்து	:	நிறைவேற்றப்பட்டது

இணைப்பு – 2

குழுவின் பரிந்துரை

மருத்துவமனைகளில், மருத்துவம் சார்ந்த மற்றும் சாராத சுமார் 10,500 பணியிடங்களை நிரப்புவது குறித்து.

1.	வரிசை எண்.	:	1
2.	துறையின் பெயர்	:	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
3.	உறுதிமொழி எண்.	:	541 / 2006
4.	பொருள்	:	மருத்துவமனைகளில், மருத்துவம் சார்ந்த மற்றும் சாராத சுமார் 10,500 பணியிடங்களை நிரப்புவது குறித்து.
5.	2006–2007 ஆம் ஆண்டுக்கான மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மானியக் கோரிக்கை மீதானவிவாதம் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை	:	
	நாள்	:	17.08.2006
6.	உறுப்பினர் பெயர்	:	
7.	மாண்புமிகு அமைச்சர் பெயர் மற்றும் உறுதிமொழி	:	மாண்புமிகு திரு.கே.கே.எஸ்.எஸ்–ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்
			... இவை அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் உடன் நிரப்பப்படும்.
8.	துறையின் பதில்	:	கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையைச் சார்ந்த பல்வேறு இயக்கங்களின் கீழ் இயங்கும் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவம், மருத்துவம் சார்ந்த மற்றும் சாராத 9342 பணியிடங்கள் நிரப்புவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு சுமார் 6386 பணியிடங்கள் இது வரை நிரப்பப்பட்டுள்ளன. அரசு வேலைவாய்ப்பகம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இன்னும் காலியாகவுள்ள பணியிடங்கள் அனைத்தும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காலியாகவுள்ள பணியிடங்கள் உடனடியாக நிரப்ப வேண்டும் என்பதற்காக அரசின் துறைச் செயலாளர் அளவில் இயக்குநர்களுடன் மாதந்தோறும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

9. ஆய்வு செய்யப்பட்ட நாள் : 27.11.2007

10. குழுவின் பரிந்துரை : பெரிய மருத்துவமனைகளில் கூடுதலாக மருந்தாளார்களை நியமிப்பதற்கும் கூடுதலாக மருந்து வழங்கும் பிரிவுகளைத் திறப்பதற்கும் குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 3

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

17.8.2006	சென்னை
1.9.2006	சென்னை
5.12.2006	சென்னை
12.12.2006 13.12.2006	மதுரை திண்டுக்கல்
2.1.2007 முதல் 11.1.2007 வரை	வடமாநிலங்களில் ஆய்வுப்பயணம் அந்தமான்–நிக்கோபர், கொல்கத்தா, புதுதில்லி, ஆக்ரா, அமிர்தசரஸ் மற்றும் மும்பை
9.4.2007	சென்னை
23.4.2007	சென்னை
13.6.2007	சென்னை
12.7.2007 13.7.2007	கோயம்புத்தூர்
14.7.2007	நீலகிரி
2.8.2007 3.8.2007	சென்னை
16.8.2007 17.8.2007 18.8.2007	காஞ்சிபுரம் விழுப்புரம் கடலூர்
6.9.2007 7.9.2007	சென்னை
27.9.2007 28.9.2007	வேலூர்
29.9.2007	திருவண்ணாமலை
27.10.2007	சென்னை

30.10.2007 31.10.2007	சென்னை
12.11.2007 13.11.2007	கன்னியாகுமரி
14.11.2007	திருநெல்வேலி
26.11.2007 27.11.2007	சென்னை



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு (2007–2008)

(பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை)

இருபத்து நான்காவது அறிக்கை

பிழை திருத்தப் பட்டியல்

பக்கம்	வரிசை எண்	வரி எண்	பிழை	திருத்தம்
V	2	2	ஓமந்தூரர்	ஓமந்தூரார்
1	இணைப்பு–1 (7)	2	மற்று	மற்றும்
17	8	15	குடிருப்புகள்	குடியிருப்புகள்
18	பத்தி 2	11	ஏடுக்கப்பட்டது	எடுக்கப்பட்டது
27	8	11	மரபுரிமையர்களுக்கு	மரபுரிமையாளர்களுக்கு
90	8	8	சாரதா	சாராத
116	8	4	அத்தியவசியமாள	அத்யாவசியமான
120	7	6	Bradband Connectivity	Broadband Connectivity
120	8	12	சுகாதார	சுகாதார
121	8	2	Bradband Connectivity	Broadband Connectivity
126	இணைப்பு 3	23	27.10.2007	18.10.2007